பக்கங்கள்: பதினாறு

# உதயன்

ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 15 திங்கட்கிழமை (31.08.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 278

# 'சனல் -4' வீடியோக் காட்சி தொடர்பாக ஐ.தே.க. விசாரணைக்கு வலியுறுத்து

## இலங்கைக்கு எதிரான சதியாக இருக்கலாம் என்கிறது

கொழும்பு, ஒகஸ்ட் 31

இலங்கை இராணுவம் இளைஞர்கள் சிலரைச் சுட்டுக்கொல்வது போன்ற வீடியோ காட்சியொன்றை 'சனல் - 4' தொலைக்காட்சி வெளியிட்டிருப்பது தொடர்பாக இலங்கை அரசு உடனடியாக விசாரணை நடத்தவேண்டும் என்று அரசிடம் ஐக்கிய தேசியக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த வீடியோக் காட்சிப் பிரசாரம் எமது நாட்டுக்கு எதிரான சதியாக இருக்கக்கூடும். இது தொடர்பாக விசாரித்து உண்மை நிலைமையை அரசு வெளிப்படுத்தவேண்டும் என்றும் அக்கட்சி கோரியுள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்காவில் பத்துப் பேர் கைது

கொழும்பு, ஒக. 31

கட்டுநாயக்க அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் வைத்து சந்தேகத்தின் பேரில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் சனிக்கிழமை இரவு கைது செய்யப்பட்டனர் என கட்டுநாயக்க பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு படையினர் முழு ஒத்துழைப்பையும் நல்குவர்

### யாழ்.மாவட்டத்தின் புதிய தளபதி மார்க் உறுதி



யாழ்ப்பாணம், ஒக.31

வடக்கை அபிவிருத்தி செய்வதற் கென அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டங்களுக்கு எமது படையினர் முழு ஒத்துழைப்பையும் நல்குவர்.

யாழ்.மாவட்டத்தின் புதிய கட்டளைத் தளபதியாகப் பதவியேற்றுள்ள மேஜர் ஜெனரல் எல்.பி.ஆர்.மார்க் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.படைகளின் தலைமையகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அவர் பதவி யேற்றுக்கொண்டார். படையினரின் அணி வகுப்பு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## முகாமிலுள்ள ஈழத்தமிழரைக் காக்கக் கோரி சென்னையில் புதனன்று ரயில் மறியல்

சென்னை, ஒக. 31

இலங்கையில் முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்களை காப்பாற்றக் கோரி நாளை மறுதினம் புதன்கிழமை ரயில் மறியல் நடத்தப்படும் என்று திராவிடர் கழகம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இலங்கையில் போரில் லட்சம் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். அது போதாது என்று வவுனியாவில் முகாம்கள் என்ற பெயரில் முள் வேலிகளுக்குள் 3 லட்சம் தமிழர்கள் முடக்கி வைக்கப்பட்டு, மிருகங்களை விட கேவலமாக நடத்தப்படுகின்றனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிச்சந்தேக நபர்களை விசாரிக்க நீதிபதிகள் அடங்கிய ஆணைக்குழு

கொழும்பு, ஒக.31

கைது செய்யப்படும் விடுதலைப்புலி சந்தேக நபர்களை விசாரணை செய்வதற்குத் தனியான விசாரணை ஆணைக்குழுவொன்றை அமைப்பது பற்றி அரசு ஆலோசித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகி யுள்ளன.

புலிகள் இயக்கத்துடன் தொடர்புள்ளவர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஒன்றரை இலட்சம் ஆசிரியர்களுக்கு டிசெம்பர் மாதத்தில் பதவி உயர்வுகள்

### கல்வியமைச்சின் சுற்றறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 31

கடந்த வருடம் ஜூன் மாதம் 30 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரவிருந்த ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமான ஆசிரியர்களின் பதவியுயர்வு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருமென கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

பதவியுயர்வுக்கு ஏற்கனவே நியமிக்கப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு முகாமில் இருந்து இன்னொன்றுக்குச் செல்ல முயன்றவேளை அகதிகள் தாக்கப்பட்டார்களா?

கொழும்பு, ஒக. 31

வவுனியா மனிக்முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களில் சிலர் ஒரு முகாமில் இருந்து மற்றொரு முகாமுக்குச் செல்ல முற்பட்டபோது தாக்குதலுக்கு இலக்கானார்கள் எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றஞ்சாட்டி உள்ளார்.

நேற்றுக்காலை இராமநாதன் இடைத்தங்கல் முகாமில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக அவர் பி.பி.ஸி. தமிழோசைக்கு நேற்றுத் தெரிவித்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் ஜனாதிபதிக்குப் பதிலாகப் பிரதமர்

கொழும்பு, ஒக.31

அடுத்த மாதம் அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையில் 64 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பதிலாகப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கலந்துகொள்வார் என இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

80 பேரைக் கொண்ட விசேட குழுவொன்றுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வார் எனவும் தேசிய விடுதலை முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, தேச நிர்மாண அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வார்கள்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ப் பெண் விசா இன்றி லண்டன் செல்வதற்கு கொழும்பில் உள்ள தூதரகம் உதவியதாக அரசு விசாரணை

### விமான நிலையத்துக்கு ராஜதந்திரி கூட்டிச் சென்றாராம்!

கொழும்பு, ஒக.31

இலங்கைத் தமிழ்ப் பெண் ஒருவர் விசா இல்லாமல் கொழும்பிலிருந்து பிரிட்டனுக்குச் செல்வதற்கு கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகம் உதவி செய்தமை தெரியவந்திருப்பதாக இலங்கை அரசு தெரிவித்திருக்கின்றது.

குறித்த யுவதி பயங்கரவாதச் செயல்களுடன் தொடர்புபட்டவரா, பிரிட்டிஷ் தூதரகம் இவ்வாறு மேலும் பலருக்கு விசா இன்றிச் செல்வதற்கு அனுமதி வழங்கியுள்ளதா என்ற கோணத்திலும் விசாரணைகள் நடைபெறுகின்றன.

அரசு இது தொடர்பாக உயர்மட்ட விசார

(15 ஆம் பக்கம் பார்க்க)



மீண்டும் விற்பனையில்

டிஸ்கவறி 135 CC கறுப்பு/சிவப்பு, கறுப்பு/ நீலம்

பல்சர்- 180 CC, 200 CC கறுப்பு, சிவப்பு நிறங்களில்

XCD-135 CC, CT-100 CC- மறூன் நிறம்

PLATINA- 125 CC (KICK. Start & Self Start) மறூன் நிறம்



S.J. மோட்டோர்ஸ் 164, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 2227566

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வவுனியா மாவட்ட அணியுடன் மோத மகாஜனா அணி ஏ-9 ஊடாகச் சென்றது

வலி.வடக்கு.ஓக 31

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கை பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்றுவரும் 15 வயதுப்பிரிவினர்களுக்கான 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிகெட் சுற்றுப் போட்டியில் வவுனியா மாவட்ட அணியுடனான ஆட்டத்தில் விளையாடுவதற்காக யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட அணி ஏ-9 பாதை ஊடாக நேற்று வவுனியா புறப்பட்டது.

கடந்த வாரம் இப்போட்டியில் கலந்து கொள்வதற்கு வவுனியா மகாவித்தியாலய அணியின் வருகையை எதிர்பார்த்து இருந்த போதிலும் இறுதிநேரத்தில் அவர்கள் ஏ-9 பாதை ஊடாக வரமுடியாத நிலைமையைத் தொடர்ந்து போட்டி நிறுத்தப்பட்டது.

வவுனியா மாவட்ட அணியுடன் மகாஜனா வெற்றி பெறும் சந்தர்ப்பத்தில் மீண்டும் மன்னார் மாவட்ட அணியுடனும் விளையாடிய பின்னரே யாழ்.மாவட்ட அணியான தெல்லிப்பழை மகாஜானாக் கல்லூரி திரும்பவுள்ளது. (1-86)

## மீளாத்துயரினிலே



தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராகக் கடமையாற்றிய மாணிக்கசிங்கம் தேவநேசன் நிறோஷன் அவர்களின் திடீர் இழப்பினால் துயரில் மூழ்கி உள்ள அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேசசெயலகம், தென்மராட்சி, சாவகச்சேரி.

நலன்புரிச் சங்க உறுப்பினர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### நடராசா மகேஸ்வரி (ராசாத்தி)



தாவடி காளிகோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா மகேஸ்வரி (29.08.2009) அன்று காலமானார்.

அன்னார் நடராசாவின் அன்பு மனைவியும், குலேபகாவின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சிவபாக்கியம், காலஞ்சென்ற பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சொக்கலிங்கத்தின் அன்பு மாமியும், சயானா, யதுர்சன், யசதனா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2009) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோவிலடி, தாவடி வடக்கு, கொக்குவில்.

தகவல்
கணவர் (நடராஜா)

### சின்னத்துரை பொன்னம்பலம்



காரைநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பொன்னம்பலம் நேற்று (30.08.2009) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும், நிர்மலாதேவியின் அன்புக் கணவரும், ஜேக்குமாரின் அன்புத் தந்தையும், சரஸ்வதி, கந்தசாமி, பராசக்தி, ஈஸ்வரி, பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கெங்காதரன், சிவாஜினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2009) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செம்பாடு, தங்கோடை, காரைநகர்

தகவல்
குடும்பத்தினர்

### வைத்திலிங்கம் ஞானத்துரை

(ஓய்வுபெற்ற தொழில் நிபுணர், C.T.B)

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் ஞானத்துரை நேற்று (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்களான வைத்திலிங்கம் - முத்துமாரி தம்பதிகளின் அன்பு மகனும் அமரர்களான மாணிக்கம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் இராசம்மாவின் பாசமிகு கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2009) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12 மணிக்கு விளாவெளி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காயா வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. தொ.பே060 221 6840

தகவல்
ஞா. இராசம்மா
(மனைவி)

## நகரில் துணிகரமாக மோட்டார் சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம் ஓக. 31

யாழ்.வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றைத் திருடர்கள் மிகவும் துணிச்சலுடன் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்த துணிச்சல் மிக்க திருட்டுச் சம்பவம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

கான்ரில் லொக் முறையில் பூட்டப்படாத நிலையில் பூட்டுப்போட்டு பூட்டப்பட்ட நிலையில் நின்ற மோட்டார் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவம் அதிகரித்திருப்பதால் மோட்டார் சைக்கிளை கான்ரில் லொக் போட்டு பூட்டி விட்டு செல்வதே அவற்றுக்கான பாதுகாப்பை ஏற்படுத்த முடியும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. (1 - 224)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 16 | 01.09.2009 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | துவாதசி |
| | பி.ப. 4.36 வரை |
| நட்சத்திரம்: | உத்தராடம் |
| | மு.இ. 7.09 வரை |
| சுபநேரம்: | 10.35 - 12.05 |
| ராகுகாலம்: | 03.05 - 04.35 |

*(மூன்றாம் பக்கத்தில் உள்ள நாளைய குறிப்பு தொழில்நுட்பக் கோளாறு க்ாரணமாக தவறுதலாக அச்சாகியுள்ளது)*

## தப்பியோடிய கைதியை பொலிஸார் துரத்திப்பிடித்தனர்

யாழ்ப்பாணம் ஓகஸ் 31

யாழ்.பொலிஸ் நிலையத்தில் இருந்து தப்பியோடிய கைதி ஒருவர் பொலிஸாரால் துரத்திப் பிடிக்கப்பட்டார்.

இந்த சம்பவம் கடந்த சனிக்கிழமை பி.ப. 4 மணியளவில் இடம்பெற்றது.

குற்றச்செயலில் கைது செய்யப்பட்ட கைதி ஒருவர் பொலிஸ் நிலையத்தின் பின்புறமாகவுள்ள புங்கன் குளத்தினுடாக தப்பி ஓடிய சமயம் பொலிஸார் சம்பந்தப்பட்டவரை துரத்தி மீண்டும் பிடித்துச் சென்றுள்ளன. (1 - 224)

## முன்பள்ளி விளையாட்டு விழா

சுழிபுரம், ஓக. 31

சுழிபுரம் பாரதி முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா இன்று திங்கட்கிழமை பி.ப 2 மணிக்கு திருமதி ஞானேஸ்வரி துஷ்யந்தன் தலைமையில் ஸ்ரீ கதிர்வேலாயுதர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. மேற்கு பிரதேச சபை செயலாளர் சி. புத்திசிகாமணியும் கௌரவ விருந்தினர்களாக ஐக்கிய நா. சை. வி. உபஅதிபர் செல்வி ஆ. ஜெயராணி, சுழிபுரம் மாதர். கி. அ. ச. தலைவர் திருமதி சி. புனிதவதி ஆகியோரும் கலந்து கொள்வர். (06-28)






## முக்கிய அறிவித்தல்

யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் யாழ்ப்பாணம்

01.09.2009 செவ்வாய்க்கிழமை பி.ப ஒரு மணிக்கு அவசர கலந்துரையாடலொன்றை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் சகல ஆசிரியர்களும், கல்விசாரா ஊழியர்களும் தவறாது பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

வி. மாணிக்கம்
அதிபர்





இலங்கையில் பிரபல்யம் வாய்ந்த JAYASARA நிறுவனத்தினர் உங்களுக்கு ஆலோசனைகளையும், தேவையான தகவல்களையும் வழங்குவதற்கும் அந்நிறுவனத்தினர் யாழ்ப்பாணம் வந்துள்ளார்கள். யாழ்ப்பாணத்தில் எமது நிறுவனத்தினூடாகப் பெற்றுக்கொண்ட இயந்திர சாதனங்கள் மூலம் சுமார் 25 இற்கும் மேற்பட்ட வெதுப்பகங்கள் திருப் திகரமான பேக்கரி உற்பத்திகளை மேற்கொள்கிறார்கள். இதன் மூலம் நிறைவானதும் இலாபகரமானதுமான சேவைகளை வழங்குகிறார்கள்.

தொடர்புகளுக்கு: 0777305954 (சரத்)
0777222282 (கிங்சாந்)


## கண்ணீர் அஞ்சலி

ஏழாலை சைவ சன்மார்க்க பாடசாலை ஆசிரியை
திருமதி உதயநாதன் ரஞ்சிதமலர் (றோசா ஆசிரியை)
அவர்கள் காலமாகியதையிட்டு எமது இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாங்கள் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
ஏழாலை சைவ சன்மார்க்க பாடசாலை.

## கண்ணீர் அஞ்சலி



யாழ். பல்கலைக்கழக புள்ளிவிவரவியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ச.அறிவழகன் அவர்களது தாயார்

திருமதி
பூரணபாக்கியம் சங்கர்

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ். பல்கலைக்கழக
விஞ்ஞான ஆசிரியர் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி

சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கி உத்தியோகத்தர் க.சிவகுமாரின் அன்புத் தாயார்

திருமதி
கந்தையா பாக்கியம்

அவர்களின் மறைவால் துயருறும் அவர் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம்.

முகாமையாளரும், ஊழியர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மீண்டெழ முயலும் பாரதீய ஜனதாவும் துவண்டு போய்க் கிடக்கும் ஐ.தே.கவும்!

இந்தியாவில் பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதா அடுத்தடுத்துத் தேர்தல் தோல்விகளில் துவண்டது. ஆனால் அவற்றிலிருந்து மீளுவதற்கான புத்துயிர்ப்பு நடவடிக்கையில் அது மும்முரமாக முயன்று நிற்பது இப்போது வெளிப்படை.

ஆனால் அதேபோன்று அடுத்தடுத்துத் தேர்தல் தோல்விகளை இலங்கையில் சந்தித்து வரும் இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவினால் மட்டும் தன்னைப் புத்துயிர்ப்புச் செய்ய இயலவில்லை. அது, கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைபோல - உலக்கை தேய்ந்து உளிப்பிடியான மாதிரி - நலிவுற்றுச் செல்கின்றதே தவிர, புத்தூக்கம் பெறுவதாக இல்லை.

இந்நிலைமை ஏன் என்று நோக்குவது சுவாரஸ்யமானது.

இலங்கை அரசியலில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்ப்பு ஏதுமற்ற செல்வாக்கு வளர்ச்சியும் அதிகார வலுவும் ஆபத்தான விளைவுகளுக்கு - விபரீதங்களுக்கு - வழிகோலக் கூடிய சூழலை ஏற்படுத்தலாம் என்று அரசியல் ஆய்வாளர் ஒருவர் எச்சரிக்கை விடுக்கும் அளவுக்குப் பிரதான எதிர்க்கட்சி நலிவுற்று, சிதைவுற்றுப் பின்னடைவுக்குச் சென்றிருக்கின்றது என்பது உண்மை.

விடுதலைப் புலிகள் அமைப்பு இராணுவ ரீதியாக சிதறடிக்கப்பட்டு, புலம் பெயர்ந்த தமிழர்களின் வலிமையும் முடக்கப்பட்ட நிலையில் எதிர்த்தரப்பினரே அற்ற ஓர் ஆட்சியாளராக மஹிந்த ராஜபக்ஷ வலிமை அடைந்து வருகின்றார் என்கிறார் அந்த ஆய்வாளர்.

ஒருபுறம் ஆட்சித் தலைவர் அதிகார பலத்திலும், ஆட்சி வலுவிலும், ஆதரவு செல்வாக்கிலும் மேன்மேலும் வலிமைபெற்று வருகின்றார் என்றால், மறுபுறம் பிரதான எதிர்க்கட்சியும், எதிர்க்கட்சித் தலைவரும் செல்வாக்கு இழந்து, ஆதரவு குன்றித் தடுமாறும் நிலைமை தொடர்கின்றது.

இந்தியாவில் தேர்தல் தோல்விகளில் இருந்து மீண்டு, கட்சியைப் புத்துயிர்ப்புப் பெறச் செய்வதற்காக பாரதீய ஜனதாக்கட்சி தனது தலைமையையே மாற்றத் தயாராகிவிட்டது. முன்னாள் பிரதமர் வாஜ்பாய் தீவிர அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொண்டமையை அடுத்து கட்சித் தலைமையை வழிநடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட லால் கிஷான் அத்வானியின் தலைமைக்கே இப்போது வேட்டு வைக்கும் நிலைக்கு அக்கட்சி தயாராகி விட்டது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

வயதுபோன தலைமுறையைத் தலைமைப் பதவியில் இருந்து மாற்றி, அப்பதவிகளுக்கு இள இரத்தம் பாச்சுவதன் மூலம், தற்போது துவண்டுபோய் உள்ள கட்சியை மீண்டெழ வைக்கலாம் என்பது அக்கட்சியின் இரண்டாம் மட்டத் தலைவர்களின் எண்ணம். இதனால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்தும், கட்சியை வழிநடத்தும் பொறுப்பில் இருந்தும் அத்வானியும், கட்சித் தலைவர் பதவியில் இருந்து ராம்நாத்சிங்கும் வெளியேற்றப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. ராம்நாத்சிங்கின் தற்போதைய பதவிக்காலம் எதிர்வரும் நவம்பருடன் முடிவடைகின்றது. அதுபோல, எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து தாம் இவ்வருட இறுதியில் - டிசெம்பரில் - பதவிவிலக அத்வானி இணங்கியுள்ளார் எனக் கூறப்படுகின்றது. ஆனால் அதற்கு முன்னரே - உடனடியாகவே - கையோடே - இருவரையும் அப்பதவிகளில் இருந்து நீக்கிப் புதியவர்களிடம் பொறுப்பை ஒப்படைக்க அக்கட்சி உறுதியாகத் தயாராகி வருகின்றது.

இத்தகைய அதிரடி மாற்றத்தைச் செய்யமுடியாமல் இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. மட்டும் ஏன் இப்படித் தொடர் தோல்விகளுடன் அழுது வடிகின்றது என்பது நியாயமான கேள்வியே.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மஹிந்த ராஜபக்ஷவும், தமிழீழ விடுதலைப் புலிகளும் இரகசிய உடன்பாடு கண்டு, ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சதித்திட்டம் மூலம் தோற்கடித்தமைதான் ஐ.தே.கட்சியின் சரிவுக்குக் காரணம் என்று உப்புச் சப்பற்ற விளக்கங்களைச் சொல்லிக்கொண்டிருப்பதை விடுத்து, யதார்த்தப் புறநிலைகள் குறித்து ஐ.தே.க. ஆராய்வதுதான் இன்றைய நிலையில் சிறந்த வழியாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சுமார் ஐம்பது லட்சம் வாக்காளர்களின் ஆதரவைப்பெற்ற ரணில் விக்கிரமசிங்க, வெறும் ஒரு லட்சத்து எண்பதாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்றுப் போனமை அக்கட்சிக்கு ஒரு பின்னடைவுதான். ஆனால் அந்தத் தோல்விக்குப் பின்னர் அதிலிருந்து மீண்டெழுந்து கட்சியை எப்படி மீளக் கட்டியெழுப்புவது என்பது குறித்து சிந்தித்துச் செயற்பட ஐ.தே.கட்சியின் இரண்டாம் மட்டத் தலைவர்கள் தவறிவிட்டார்கள். அதைவிட பதவி ஆசையும், அதிகாரக் கதிரையும்தான் அவர்களுக்கு முக்கியமாகப் பட்டன. அதனால்தான் இரண்டாம் மட்டத் தலைவர்கள் பலரும் - நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைத் தக்க வைத்திருப்பதற்காக ஐ.தே.கட்சியின் அங்கத்துவ அடையாளத்தைப் பெயருக்கு வைத்துக்கொண்டே - அரசுப்பக்கம் தாவி அமைச்சரானார்கள். எஞ்சிய இரண்டாம் மட்டத் தலைவர்களில் சிலர், கட்சியின் தலைமை தானாகக் கனிந்து தமது மடியில் வந்து விழும் என்ற நம்பிக்கையில், அதுவரை குழப்பம் செய்யாமல் - கட்சிக்குள் புரட்சிசெய்து அதைச் சீர்படுத்த முயலாமல் - காத்து, பார்த்து இருக்கின்றார்கள். இப்படி சுயநலக் கும்பலின் கூட்டாக பிரதான எதிர்க்கட்சி இருக்குமானால் அது புத்துயிர்ப்புப் பெறுவது எங்ஙனம்?

இந்தியாவிலோ பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாவில் கட்சி மீதும், அதனை அதிகாரத்துக்குக் கொண்டு வரவேண்டும் என்ற இலக்கின் மீதும் தீவிர ஈடுபாடு கொண்ட இரண்டாம் மட்டத் தலைவர்களும், தொண்டர்களும் இருக்கின்றார்கள். கட்சியை மீண்டெழவைக்க கட்சிக்குள் இருந்தபடியே புரட்சி செய்ய - கிளர்ந்தெழ - அவர்களால் முடிகின்றது.

ஆனால் இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியோ, தங்களின் கடந்தகால அரசியல் ஊழல்கள், முறைகேடுகள் போன்றவற்றை மறைத்துத் தப்புவதற்காகவும், பதவி வேட்கை மீதான தங்களின் தீராத ஆசையை நிறைவேற்றுவதற்காகவும், எப்போதுமே ஆளும் கட்சியை நோக்கிக் குத்துக்கரணம் அடிப்பதையே இலக்காகக் கொண்ட இரண்டாம் மட்டத் தலைவர்களையே வளர்த்துத் தன்வசம் வைத்திருப்பதால் தொடர் தோல்விகளில் இருந்து மீளமுடியாமல் துவண்டுபோய்க் கிடக்கின்றது.

பாவம் எதிர்க்கட்சித் தலைவர். அந்தப் பதவியிலாவது தாம் நீடிக்க முடியும் என்ற திருப்தியோடு அதைக் கட்டிப் பிடித்துக்கொண்டிருக்கிறார் அவர். அதை விட்டுக்கொடுத்தேனும், கட்சிக்குப் புது இரத்தம் பாய்ச்சும் தாராளம் அவருக்கும்தான் இல்லையே.....!

# புலிகள் உருவாக உதவி புரிந்தவர் இந்திரா; அவர்களை அழிக்க உதவி புரிந்தவர் சோனியா

**நேற்று (30.08.2009) 'சண்டே ரைம்ஸ்' எழுதியிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி இங்கு தரப்படுகின்றது.**

அரசியலில் நிரந்தர எதிரிகள் கிடையாது. நிரந்தர கரிசனைகள்தான் இருக்கின்றன என்று யார் சொல்லியிருந்தாலும் 'இது முற்றுமுழுதாக சரியான கருத்தாகத் தெரியவில்லை. அரசியல்வாதிகள் விசித்திரமான நண்பர்களை உருவாக்கிக்கொள்வார்கள் என்பதில் உண்மை இருக்கின்றது.

தமது எதிராளிகளைக் கடுமையாக எதிர்ப்பவர்கள் இருக்கிறார்கள். சில சமயம் எதிரிகளை அழித்தொழிக்கும் அளவுக்கும் போய்விடுவார்கள். ஆனால் கால சூழ் நிலைகள் மாறுகின்றன. அந்தச் சமயங்களில் நீண்டகாலம் பிரிந்திருந்த காதலர்கள் போல் தழுவிக்கொள்கிறார்கள்.

நிரந்தர கரிசனைகள் என்று ஏதும் இருக்கின்றனவா? சமீபகாலத்தில் இலங்கையில் நடந்துள்ள சம்பவங்களைப் பார்க்கையில் நிரந்தர கரிசனைகளும் கூட சில சமயங்களில் நிரந்தரமற்றவையாகின்றன என்பது தெரியவந்துள்ளது.

1980ஆம் ஆண்டின் மத்திய காலத்தில் அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் நிர்வாகம், இலங்கையில் பிரிவினைவாத யுத்தத்தில் ஈடுபடும் வகையில் கெரில்லா இயக்கங்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான முகாம்களைத் தென்னிந்திய மாநிலங்களில் உருவாக்கியது. அப்போதைய இலங்கை அதிபர் ஜே.ஆர்.ஜய வர்தனாவின் அமெரிக்க சார்புக் கொள்கையில் அவர் ஆத்திரம் கொண்டிருந்தார்.

'யங்கி டிக்கி' என்று சிலரால் வர்ணிக்கப்பட்டவரான ஜே.ஆர்.அப்போது அமெரிக்கக் கம்பனியொன்றுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள எத்தனித்து வந்தார். இரண்டாவது உலக யுத்தத்தின் போது திருகோணமலையில் கைவிடப்பட்டிருந்த எண்ணெய்த் தாங்கிகளைக் கையேற்பதில் அவர் அக்கறை கொண்டிருந்தார். சுமார் 100 தாங்கிகள் அங்கிருந்ததாகவும் ஒவ்வொரு தாங்கியும் 10 லட்சம் கலன் எண்ணெயைக் கொள்ளக் கூடியதாகக் கருதப்பட்டது. எனவே இதில் ஏதும் இராணுவத் தொடர்புகள் இருக்க லாம் என்று இந்தியாவில் சந்தேகம் ஏற்பட்டிருந்தது. இந்தியாவின் எதிர்ப்பால் அந்தத்திட்டத்தை முழுமையாக இலங்கை கைவிட வேண்டியதாயிற்று.

அதேசமயம் பல்வேறு கொள்கைகளையும் வேறுபாடுகளையும் கொண்ட இயக்கங்கள் ஆயுதங்கள் வழங்கப்பட்டு ஆதரிக்கப்பட்டன. பத்து வருடங்களின் பின்னர் அந்த இயக்கங்களில் ஒன்றான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு பயங்கர அமைப்பாக உருவெடுத்தது. அது ஏனைய அமைப்புக்களையெல்லாம் கபளீகரம் செய்தது மாத்திரமன்றி - இந்திரா காந்தியின் அதிக ஆதர வைப் பெற்றிருந்த தமிழீழ விடுதலைக் கழகமும் (ரெலோ) இதில் அடங்கும். அதனை உருவாக்கியவரின் நோக்கங்களுக்கு மாறாகவும் செயற்படலாயிற்று.

புலிகள் இயக்கம் திருமதி காந்தியின் புதல்வர் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியையும்கூட கொலை செய்தது. மீண்டும் பிரதமராவார் என்று கருதப்பட்ட அவர் தேர்தல் பிரசாரமொன்றில் ஈடுபட்டிருந்தநேரம் தமிழ் நாட்டில் ஸ்ரீபெரும்புதூரில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டார்.

18 ஆண்டுகளின் பின்னர் அவரது மனைவி சோனியாகாந்தி அவ்வியக்கத்தை அழிப்பதற்கு உதவி செய்திருக்கிறார்.

இலங்கையில் புலிகள் இயக் கத்தை இராணுவ ரீதியில் தோற்கடித்து அழிப்பதற்கு இலங்கையுடன் கூட்டுச் சேர்ந்து இந்தியா பங்காற்றியுள்ளது என்ற விடயம் இலங்கை அரச தலைவர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒரு விடயம். இராணுவ மட்டத்தில் கனரகப் ஆயுதங்களை இந்தியா வழங்காவிட்டாலும் அதற்கு இணையான மிகப் பெறுமதியான புலனாய்வு மற்றும் உதவிகளை இந்தியா வழங்கியுள்ளது.

அந்த வகையில் பார்த்தால் புலிகள் இயக்கத்தின் பிறப்பு, வளர்ப்பு, சமீப காலத்தின் இறப்பு ஆகிய மூன்று நிலைகளையும் இந்தியா கவனித்து இருக்கிறது எனலாம். என்றாலும் இந்தியாவுக்கு இதனால் நஷ்டம் ஏதும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

### திருகோணமலையில் இந்தியா கால்பதிப்பு

திருகோணமலையில் அமெரிக்கா தன் பெருவிரலை ஊன்றமுடியாத நிலையில் இந்தியா தனது காலை பதித்துக் கொண்டுள்ளது.

கைவிடப்பட்ட எண்ணெய்க் குதப் பகுதியில் ஒரு பகுதியை இந்தியா இப்போது குத்தகைக்குப் பெற்றுள்ளது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் கூட்டுச் சேர்ந்து இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் இந்த எண்ணெய்க் குதங்களைக் குத்தகைக்கு எடுத்துள்ளது. உப்புவெளியில் இந்தியா இப்போது பிர தான மின்சார நிலையத்தைக் கட்டி வருகின்றது.

எனவே கடந்தகால சம்பவங்களை அவதானிக்கையில் நிரந்தரக் கரிசனைகளும்கூட காலப்போக்கில் மாறிவிடுகின்றன என்பது தெரிகின்றது.

இன்னொரு முக்கியமான விடயம் என்னவென்றால் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதியுடனான அரச மைப்பு அதிகாரங்களாகும். காலஞ்சென்ற ஜனாதிபதி ஜே. ஆர்.ஜெயவர்த்தனாவினால் உருவாக்கப்பட் ஆட்சிமுறை இது.

1977இல் அதிகாரத்துக்கு ஆறில் ஐந்து வீத அபரிமிதமான பெரும் பான்

## எதிர்க்கட்சியில் இருந்தபோது சொன்னவைகளை மறந்துபோய்விடும் அரசியல்வாதிகள்

மையுடன் பதவிக்கு வந்து குடியரசு அரச மைப்பைத் திருத்தி அமைக்கத் தீர்மானம் எடுத்தது அவரது அரசாங்கம். 1972ஆம் ஆண்டளவில் பதவிக்கு வந்து கூட்டணி அரசு அமைத்திருந்த அமரர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா குடியரசு அரசமைப்பை உருவாக்கியிருந்தார்.

பின்னர் முழு அரசமைப்பு செயற்பாடுகளையும் மிகக் கெட்டித்தனமாக ஜயவர்த்தனா மாற்றி அமைத்து விட்டார். தேர்தல் பிரசாரங்களின்போது ஐக் கிய தேசியக் கட்சிக்கு அளிக்கப்படும் ஒவ்வொரு வாக்கும் அரசமைப்பை மாற்றியமைப்பதற்கான தீர்வாகவும் கணிக்கப்படும் என்று அறிவித்திருந்தார். தேர்தல் வெற்றியின் பின்னர் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டுத்திருத்தங்கள் பற்றி ஆராயப்பட்டது. புதிய அரசமைப்பு 1978 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 7ஆம் திகதி அமுலுக்கு வந்தது. அதுவே நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சிக்கு வழிகோலியது.

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த 30ஆவது வருடாந்தத் தினத் தில் (4 - பெப்ரவரி - 1978) அன்று பிரதமமந்திரி ஜே.ஆர்.ஜயவர்த்தனா ஜனாதிபதி ஜயவர்த்தனா ஆனார். அவர் நாட்டின் தலைவராக மட்டுமன்றி அரசாங்கத்தின் தலைவராகவும் ஆனார். அந்த வகையில் இரண்டு தவணைகள் பதவி வகித்தார். அவருக்குப் பின் பதவிக் குவந்த ரணசிங்க பிரேமதாசவின் பதவிக்காலம் ஒரு கொலை காரனால் வெட்டிக் குறைக்கப்பட்டது. அவருக்குப்பின் அரசியலில் அதிக பிரபல்யம் பெறாத ஓர் அரசியல்வாதி, பிரதம மந்திரி டி.பி.விஜயதுங்க பதவிக்கு வந்தார். இதுவரை காலமும் ஐ.தே.க. விலிருந்து மூவரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து இருவரும் அந்தப் பதவியிலிருந்துள்ளார்கள். அவர்களில் முதலில் சந்திரிகா பண்டாரநாயக்கா. அவருக்குப்பின் மகிந்த ராஜபக்ஷ பதவியிலிருக்கிறார்.

இவ்விருவரும் எதிர்க்கட்சியி லிருக்கும் காலத்தில் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியை மிகக் கடுமையாகக் கண்டித்து வந்துள்ளார்கள். முன்னையவர் அதனைக் ''கோமாளித்தனமான அரசமைப்பு'' என்று கூறிவந்தார். மஹிந்தவோ பதவிக்கு வந்ததும் அதனை ஒழித்துக்கட்டுவதாகத் தேர்தல் காலத்தில் ஜனதா விமுக்தி பெரமுனவுக்கு எழுத்து மூலம் உறுதியளித்திருந்தார்.

1978ஆம் ஆண்டு அரசமைப்பை இப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்பு கண்டித்திருந்தாலும் இப்போது அப்படியல்ல. அண்மையில் அவரது ஊடகத்துறைப் பேச்சாளரான அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன விடுத்த அறிவித்தலில், அரசமைப்பை முறையற்ற வகையில் திருத்திய மைக்க அரசு தயாராய் இல்லை என்று கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடித்து நாட்டை ஜனாதிபதி ஒன்றிணைத்துள்ளார். அவரை மீண்டும் வாக்களித்துப் பதவியில் அமர்த்தி தமது நன்றியைத் தெரிவிக்க மக்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்று ஐ.தே.கட்சி நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை ஒழிக்க விரும்புகின்றது. அதன் நிறுவுநர்களில் ஒருவரினால் உருவாக்கப்பட்டது இந்த அரசமைப்புச் சட்டம். எதிர்வரும் காலத் தில் அரசுக்கு எதிராக இதனையே முக்கிய பிரச்சினையாக முன்னெடுப்பதென அக்கட்சி முடிவு செய்துள்ளது.

### எதிர்க்கட்சிகளுக்குள் இணைப்பு ஏற்படுமா?

இந்தப் பிரச்சினையில் இரண்டு முக்கிய எதிர்க்கட்சிகளான ஐ.தே.கவும், ஜே.வி.பியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மங்களசமரவீரவின் பிரிவும் இணைந்து செயல்படக்கூடிய வாய்ப்பு இருப்பதாகத் தெரியவருகின்றது. மங்கள சமரவீர இந்த இரு கட்சிகளின் இணைப்பை ஏற்படுத்துவதில் முன்னின்று உழைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. முன்னர் சந்திரிகா ஜே.வி.பியை அரசில் இணைத்துக் கொள்வதற்கு நடுவராகச் செயல்பட்ட வரும் மங்கள சமரவீரவே என்பதால் இந்த முறையும் அவரால் அது சாத்தியமாகலாம் என்று கருதப்படுகின்றது. மகிந்த ராஜபக்ஷவின் அரசில் ஜே.வி.பி இடம்பெற்றிருந்தமைக்கான தரகர் பணியைச் செய்தவரும் அவரே என்பது தெரிந்த விடயம்.

### அரசியல்வாதிகளின் அடாவடித்தனங்கள்

பொலிஸ் திணைக்களத்தில் வெளிப்பட்டுள்ள அடாவடித்தனங்கள் ஒரு புறம் இருக்க கடந்தவாரம் அரசியல்வாதிகளின் அடாவடித்தனங்கள் பற்றித் தகவல்கள் சில வெளிவந்துள்ளன. அப்படியான ஒருசம்பவம் இது:

களுத்துறை மாவட்டத்தில் கல்தொட்ட பொலிஸ் பிரிவில் 30 வயது சஜித்குமார பாபு என்பவர் மோட்டார் சைக்கிளில் போய்க்கொண்டிருந்தார். அவரது நண்பரான சமீரா கருணாரத்ன பின்பக்கம் இருந்து பயணம் செய்துள்ளார். இருவரும் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை. ஒரு பெண் பொலிஸ் அதிகாரி அவர்களை நிற்கும்படி சைகை செய்துள்ள போதும் அதனைப் பொருட்படுத்தாமல் பெண் பொலிஸ்பக்கம் சைக்கிளைத் திருப்பி அவரை மோதித்தள்ளிவிட்டு சைக்கிளை ஓட்டிக்கொண்டு போயுள்ளார். பெண்பொலிஸ் அதிகாரி உதவி கேட்டுள்ளார். சிறிது தூரத்தில் ஆயுதம் தரித்த பொலிஸ் அதிகாரி ஒருவர் இரு வரையும் நிறுத்தியிருக்கிறார். சைக் கிளை நிறுத்திவிட்டு பாபு ஓடிவிட் டார். கருணாரத்னாவைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். பாபு இரத்தி னபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் புடைவைத் தொழில் அமைச் சருமான ரத்தினதிலக்காவுக்கு ரெலி போன் செய்துள்ளார். அதேவேளை அவர் நீர்ப்பாசனத் திட்டங்களைப்பார்வையிட்டுக் கொண்டு இருந்துள்ளார். அவர் சாரத்தை (04 பக்கம் பார்க்க)

### நாளை

| | |
|---|---|
| ஆவணி 02 | 18.08.2009 செவ்வாய்க்கிழமை |
| திதி: | திரயோதசி மு.இ. 09.09 வரை |
| நட்சத்திரம்: | புனர்பூசம் பி.ப. 02.16 வரை |
| சுபநேரம்: | 10.35 - 12.05 |
| ராகுகாலம்: | 03.05 - 04.35 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்வு



எங்களது பெருமதிப்புக்குரிய திரு.இ.சங்கர் (உரிமையாளர், பாரதி பதிப்பகம், யாழ்ப்பாணம்) அவர்களின் துணைவியார்

**திருமதி பூரணபாக்கியம் சங்கர்**

அவர்கள் 28.08.2009 வெள்ளிக்கிழமை இயற்கையெய்தியமை அறிந்து எங்களது துயரங்களை சங்கர் அவர்கள், அவரது பிள்ளைகள் கலாநிதி அறிவழகன் குடும்பத்தினர், Dr.அறிவுச்செல்வன் குடும்பத்தினர் ஆகியோருடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**சண்முகம் சைவ உணவகம் மற்றும் சிவன்கோயிலடி நண்பர்கள், யாழ்ப்பாணம்.**

# துயர் பகிர்கின்றோம்



யாழ்ப்பாணத்தில் அச்சுத் தொழிலில் முதன்மையாளரும் பாரதி அச்சகத்தின் உரிமையாளருமான **இந்திரராஜா சங்கர்** அவர்களின் பாசமிகு துணைவி

**பூரணபாக்கியம் சங்கர்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஹரிகணன் பிறிண்டேர்ஸ்,
424, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (சி-560544) **ஹரிகணன் குடும்பத்தினர்.**

மேலே உள்ள இரண்டு துயர்பகிர்வுகளும் நேற்றைய உதயனில் வெளிவந்திருக்கவேண்டியவை

# கண்ணீர் அஞ்சலி



ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகத்தின் உபதலைவரும் பாரதி பதிப்பக உரிமையாளருமாகிய திரு.இ.சங்கர் அவர்களின் அன்பு மனைவி

**பூரணபாக்கியம் சங்கர்**

இறைபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.
அன்னாரின் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

*ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம், யாழ்ப்பாணம்.* (சி/560528)

# மரண அறிவித்தல்கள்

## கிட்ணர் இரத்தினம்

செல்வநாயகம் வீதி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மற்றும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கிட்ணர் இரத்தினம் 28.08.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீதிமன்ற வீதி,*
*மல்லாகம்.* C/560543
தகவல்: சிறீஸ்கந்தராசா (மகன் - லண்டன்).

## M. T.நிறோஷன்

(நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், பிரதேச செயலகம், சாவகச்சேரி)



மட்டுவில் தெற்கைச் சேர்ந்த M.T.நிறோஷன் 28.08.2009 வெள்ளிக்கிழமை கர்த்தரண்டை சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கசிங்கம் (CTB) மற்றும் ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி மாணிக்கசிங்கம் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், மா.செ.சுதர்ஷனின் (ஆசிரியர், புசல்லாவ) சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (31.08.2009) திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு மட்டுவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உடுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சின்னப்பா வாசா,*
*மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.*
*தொ.பே. 0777251296*
தகவல்: திருமதி மாணிக்கசிங்கம்.

## புலிகள் உருவாக...

(03 பக்கத் தொடர்ச்சி)

மடித்துக் கட்டிக்கொண்டு பொலிஸ் நிலையத்துக்கு விரைந்துள்ளார். அங்கு அந்தப் பெண் பொலிசாரை தூஷணத்தால் பேசியிருப்பதுடன் "என் ஆள்களை எப்படிக் கைது செய்யமுடியும்" என்றும் கேட்டுள்ளார். பொறுப்பதிகாரி அவ்வேளை அங்கு இருக்கவில்லை. பின்னர் அவர் சிறைக்கூண்டைத் திறந்து கருணாரத்னாவை வெளியில் எடுத்துள்ளார். பின்னர் அந்தப் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் நிலையத்தில் வைத்து தம்மைப் பேசியதாகப் புகார் ஒன்றையும் அவர் தெரிவித்துள்ளார். பகுதிக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகருக்குத் தொலைநகல் ஒன்றையும் அனுப்பியுள்ளார். ஆனால் அவரது புகார் செல்வதற்கு முன்பே பெண் உத்தியோகத்தர் விவரங்கள் எல்லாவற்றையும் தெரிவித்துப்புகார் ஒன்றைத் தாக்கல் செய்துவிட்டார்.

பாபு என்பவர் பல சந்தர்ப்பங்களில் தமது கிடைத்துள்ள புகார்களில் சம்பந்தப்பட்டவர் என்று பொலிசார் தெரிவித்துள்ளனர். அவர்மீது நீதிமன்ற விசாரணை ஒன்று இருக்கிறது. கப்பம் வாங்குவது, கத்திக்குத்து மற்றும் திருட்டுத் தொடர்பான புகார்கள் அவர் மீது இருக்கின்றன.

பெண் அதிகாரி தமது கடமையைச் செய்ய முனைகையில் அரசியல்வாதி ஒருவர் சட்டத்தைத் தம் கையில் எடுத்துக் கொண்டு இவ்வாறு நடந்துகொண்டிருப்பது பொலிஸ் வட்டாரங்களில் ஆத்திரத்தை மூட்டியுள்ளது. ரத்னதிலக்க வைக்கைதுசெய்யப் பொலிசார் முயன்ற போதிலும் அவர் தலைமறைவாகி விட்டார்.

கடந்த புதன்கிழமை பலாங்கொடை நீதிவான் முன்னிலையில் ரத்னதிலக்க சரணடைந்துள்ளார். இரண்டு லட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்ல நீதிவான் விடுவித்துள்ளதுடன் பொலிஸ் அதிகாரிகளை அச்சுறுத்தலாகாதென்றும் எச்சரித்துள்ளார்.

இந்த விடயம் கடந்தவாரம் அமைச்சரவையில் ஜனாதிபதியால் குறிப்பிடப்பட்டுள்ளது. ரத்னதிலக்க அவ்வாறு நடந்து கொண்டிருப்பது தவறு. ஓர் அமைச்சர்இவ்வாறு நடந்து கொண்டிருப்பது குறித்து ஜனாதிபதி கவலை தெரிவித்தார்.

அண்மையில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவில் வாகனம் ஒன்றில் 20 கிளைமோர் வெடிகள் கண்டு பிடிக்கப்பட்ட சம்பவம் குறித்து சுட்டிக் காட்டவும் இந்தச் சந்தர்ப்பத்தை ஜனாதிபதி பயன்படுத்திக்கொண்டார். இந்த வெடிகள் மன்னாரில் கண்டு பிடிக்கப்பட்டன என்பது தவறு என்றும் அவர் தெரிவித்தார். அவை வவுனியாவில் கண்டுபிடிக்கப்பட்டவை. அவை மன்னாரிலிருந்து அந்த வாகனத்தில் கொண்டு செல்லப்படவிருந்தவை. அது நடைபெறவில்லை. ஆனால் பிழையான செய்தியொன்று வெளியிடப்பட்டுள்ளது.

சில அரசியல் வழங்கப்படும் தவறான செய்திகள் மறுக்கப்படாமை குறித்து ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரிதர்சன யாப்பாவை ஜனாதிபதி கூட்டத்தில் [illegible] நடந்துகொண்டார். (ப)

# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் செல்வராசா



இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட வல்லிபுரம் செல்வராசா 29.08.2009 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான திரு. திருமதி வல்லிபுரம் - ஞானமணி தம்பதிகளின் மூத்த புதல்வனும், அமரர்களான திரு. திருமதி நடராசா - ஞானேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், ஜெயலக்சுமியின் பாசமிகு கணவரும், அமரர் சேரன் மற்றும் பவித்திரா, வேணியன், இராகவேந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நடேசனின் (டுபாய்) அன்பு மாமனாரும், கலாநிதி வ. மகேஸ்வரன் (சிரேஷ்ட தமிழ்த்துறை விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்), மனோகரன் (ஜேர்மனி), பாக்கியலக்சுமி, கதிரமலை (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும், றோகினி, சிவவடிவேல் (மாவநல்ல வர்த்தகர்), சிவகுமாரி, தணிகைமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2009) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

K.K.S *வீதி, மஞ்சத்தடி,*
*இணுவில் கிழக்கு.*
T.P 077 4456984
தகவல்: குடும்பத்தினர்.

## வல்லிபுரம் செல்லம்மா



கரவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் செல்லம்மா நேற்று (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு வல்லிபுரத்தின் மனைவியும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் பூமணி, மனோன்மணி, மாசிலாமணி, காலஞ்சென்ற குணமணி மற்றும் பாலகிருஷ்ணன் (லண்டன்), பாலச்சந்திரன், பேபி (ஆசிரியை, வவுனியா தரணிக்குளம் மகாவித்தியாலயம்), நவமணி [(ஆசிரியை,பரு.வட இந்து மகளிர் கல்லூரி-நிரந்தரம்), (யா/செங்குந்தா இந்துக்கல்லூரி தற்காலிகம்)], மங்கையர்மணி (ஆசிரியை), பாலரூபன் (டோகா) ஆகியோரின் அன்புத் தாயாரும், தவமணிதேவி, கோபாலபிள்ளை (அம்பன்), தவயோகராஜா (சவுதி), தவராணி, சுதாகரன் (வவுனியா), சுகந்தினி (லண்டன்), ராஜ்குமார் (நல்லூர்) ஆகியோரின் மாமியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2009) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சோனப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கவுந்தில் வீதி, சம்பந்தர் கடையடி,
கரவெட்டி மத்தி, T.P - 0779377537, 0778543191
தகவல்: S.ராஜ்குமார் [மருமகன் - ராஜன்] நல்லூர்.

# மரண அறிவித்தல்

## தோமஸ் ஜேம்ஸ்

(ஓய்வுபெற்ற ஊழியர், இலங்கை மின்சாரசபை)



வசாவிளானைப் பிறப்பிடமாகவும் சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தோமஸ்ஜேம்ஸ் நேற்று (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தோமஸ் - விசிறித்தம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேதநாயகம் - சூசானம் தம்பதியினரின் அன்பு மருமகனும் திரேசம்மாவின் (செல்வம்) பாசமிகு கணவரும் மார்க் எடிசன் (பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்), மேரி றோசறியா (பிரான்ஸ்), ஹட்சன் எடின்பரோ (அசோக் - பிரான்ஸ்), பொலினஸ் கில்ரன் (Sacsan University of Holend), தோமஸ் சிம்சன் (International School, Manipay), மேரி எறிக் லென்சியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிக்ஷன் (பிரான்ஸ்), அனித்தா, நிரஞ்சினி ஆகியோரின் மாமனாரும் கனிஸ்ரன், தனுஜன், லதுசன், மரின் சாரா, டான்சரோன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, வின்சன் அல்பிறேற் (இலங்கை மின்சார சபை), லோறன்ஸ், கிறேஸ்வைலற் மற்றும் பிரான்சிஸ்கா (வேவி), டெய்சிமதலேனா, எஸ்தர் கொலஸ்திகா, ஜோண்சன் (இத்தாலி), டரன்ஸ் (இ.போ.ச, பருத்தித்துறை), றொபின்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31.08.2009) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ்.கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.11, மூளாய் லேன்,*
*சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே.இல. 060 200 6539*
தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய புதிய திருமஞ்ச வெள்ளோட்ட விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.

செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையுரையாற்றுவதையும் சிற்பக் கலைஞர் விஸ்வப் பிரம்மஸ்ரீ ஸ்தபதி செ.பாலச்சந்திரனுக்கு ஆலயத்தின் சார்பிலும் இந்து இளைஞர் சங்கம் மற்றும் திருவிழா உபயகரர்கள் சார்பிலும் ஆலய குரு பொன்னாடை போர்த்து மாலை அணிவித்துக் கௌரவிப்பதையும் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் என்.சண்முகலிங்கன் 'சிற்பக் கலாவித்தகர்' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிப்பதையும் முதல் மூன்று படங்களிலும் காணலாம்.

நிகழ்வில் கலந்துகொண்ட மக்களையும் புதிய மஞ்சத்தையும் ஏனைய இரண்டு படங்களிலும் காணலாம். (படங்கள்: நேசன்)

# 10 வருடங்களாகச் செய்கைபண்ணப்படாமலிருந்த 1,164 ஏக்கர் விளை நிலங்கள் கையளிக்கப்பட்டன

## எஞ்சிய நிலங்களையும் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக.31

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் தனங்களப்பு- மறவன்புலோப் பகுதியில் செய்கைபண்ணப்படாத நிலையில் சுமார் 10 வருடங்களாக இருந்த ஆயிரத்து 164 ஏக்கர் விளை நிலங்கள் கடந்த 27ஆம் திகதி விவசாயிகளிடம் கையளிக்கப்பட்டன.

வடக்கு மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ இந்த விளைநிலங்களை விவசாயிகளிடம் ஒப்படைத்தார். இந்த நிகழ்வில் பிரிட்டிஷ் தூதுவர் பீற்றீர் கெய்ஸும் கலந்துகொண்டார்.

10 வருடங்களாகச் செய்கை பண்ணப்படாத நிலையில் இருந்த இந்த விளை நிலங்கள் கையளிக்கப்பட்டதன் மூலம் சுமார் 600 விவசாயிகள் நன்மையடைவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

கையளிக்கப்படாத நிலையில் உள்ள விளை நிலங்களையும் விரைவில் உரிய விவசாயிகளிடம் கையளிப்பதற்கும் நடவ்டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கையளிக்கப்பட்ட விளைநிலங்களில் விவசாயிகள் உடனடியாகப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள வசதியாக அவர்களுக்கு இலவசமாக விதை நெல், உரம் மற்றும் பல உதவிகளைக் கமநல அபிவிருத்தித் திணைக்களம் மூலம் வழங்குவதற்கான நட வடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (50)

# பொன்னாலை வரதராஜப் பெருமாள் உற்சவம்; பக்தர்களின் நலன்கருதி சோதனைகள் தளர்வு

யாழ்ப்பாணம், ஓக.31

பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் இடம்பெற்றுவரும் வருடாந்தப் பெருந் திருவிழாவிற்குச் செல்லும் பக்தர்களின் நன்மை கருதி இராணுவத்தினர் பாதுகாப்புச் சோதனைகளைத் தளர்த்தியுள்ளனர்.

இங்கு காலைப்பூசை முற்பகல் 10மணிக்கும், மாலைப்பூசை மாலை 5மணிக்கும் நடைபெற்று வருகின்றன.

தினமும் மாலை 6.30மணிமுதல் இரவு 8மணி வரை "பெரியபுராணம்"எனும் தலைப்பில் சொல்லின் செல்வர் இரா. செல்வ வடிவேல் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தி வருகிறார்.

இரவு 8மணியளவில் வசந்தமண்டப பூசை ஆரம்பமாகி சுவாமி வீதியுலா வரும் நிகழ்வு இடம்பெற்று வருகிறது.

அத்துடன் ஆலயத்திற்கு தமது சொந்த வாகனங்களில் வருகின்ற அடியவர்கள் சோதனை எதுவும் இல்லாமல் தமது வாகனத்திலே கோயிலுக்குச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

# தென்னிலங்கைக்கு கடலுணவுகள்; குடாநாட்டில் அவற்றின் விலைகள் உயர்வு

சண்டிலிப்பாய், ஓக.31

யாழ்ப்பாணத்தில் பிடிக்கப்படும் கடலுணவு வகைகள் தினசரி கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படுவதால் நண்டு, இறால், கண வாய் போன்றவற்றின் விலைகள் இரு மடங்காக அதிகரித்துள்ளன. இதனால் இங்குள்ள பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

யுத்தம் முடிவிற்கு வந்ததைத் தொடர்ந்து வடகடலில் மீன் பிடிப்பதற்கு இருந்து வந்த தடை முற்றாக நீக்கப்பட்டது.

இதனால் யாழ். மாவட்டதிலுள்ள மீனவர்கள் இரவு பகலாக ஆழ்கடலிற்குச் சென்று மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் அண்மைக்கடாலமாக மீன் இறால், நண்டு, கணவாய், கடலட்டை போன்ற கடலுணவுகளின் விலையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

தற்போது ஏ-9 பாதை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து இறால், நண்டு, கணவாய் போன்ற கடலுணவுகள் தினசரி தென்னிலங்கைக்கு குளிரூட்டி வாகனங்கள் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றன.

இதனால் இவற்றின் விலை இரு மடங்காக அதிகரித்துள்ளது.

இதேவேளை பாவனையாளர்கள் பாதிக்கப்பட்ட போதிலும் மீனவர்கள் நன்மைய டைந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. (203-115)

# திருட்டுக்குத் தயாராக இருந்ததாகக் கூறப்படும் கோஷ்டி ஒன்று விழிப்புக் குழுவிடம் அகப்பட்டது

கொக்குவில் பகுதில் பெரும்திருட்டு முயற்சியை மேற்கொள்வதற்கு தயாராக இருந்தனர் என்று கூறப்படும் திருட்டுக் கோஷ்டி ஒன்று விழிப்பு குழுவிடம் வகையாக மாட்டிக் கொண்டது.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

அம்மன் வீதிப் பகுதியில் உள்ள வீடுகளில் திருட்டுக்களை மேற்கொள்வதற்கு சந்தேக நபர்கள் தயாராகிக் கொண்டிருந்த சமயம் இரவு காவல் கடமையில் ஈடுபடும் விழிப்புக் குழுவினரிடம் வகையாக மாட்டிக் கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் உடனடியாக ஆலய மணி களை ஒலிக்க செய்ததால் மக்களை விழிப்படைந்து செய்து சம்ப இடத்திற்கு ஒன்று கூடினர். இதன் பின்னர் விழிப்புக் குழுவிடம் அகப்பட்ட திருடர்கள் எனக் கூறப்படும் ஏழு பேர் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (203-224)

# வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் 68 வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஓக.31

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைக்கு உட்பட்ட வீதிகள் பல புனரமைக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் 68 வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வலிகாகம் வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் ஐந்து வீதிகளும் வலிகாமம் தெற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் மூன்று வீதிகளும், வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் ஐந்து வீதிகளும் வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் இரண்டு வீதிகளும் வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் நான்கு வீதிகளும், பருத்தித்துறை நகர சபைக்கு உட்பட்ட பகுதியில் ஒன்பது வீதிகளும், பருத்தித்துறை பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் மூன்று வீதிகளும், வல்வெட்டித்துறை நகரசபைக்கு உட்பட்ட பகுதியில் நான்கு வீதிகளும் நெடுந்தீவு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் ஐந்து வீதிகளும், ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் இரண்டு வீதிகளும், வேலணை பிரதேசச சபைக்கு உட்பட்ட பகுதியில் மூன்று வீதிகளும், காரைநகர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் மூன்று வீதிகளும், சாவகச்சேரி நகரசபைக்கு உட் பட்ட பகுதிகளில் ஆறு வீதிகளும், சாவகச் சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிக ளில் இரண்டு வீதிகளும், வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் நான்கு வீதிகளும் நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் எட்டு வீதிகளும் இவ்வாறு புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

இவ் வீதி புனரமைப்பு சம்பந்தமாக தனியார் ஒப்பந்த[illegible] விகள் கோரப்பட்[illegible] பட்டது. (203-224)

# சின்ன வெங்காயம் விலை உயர்வு

யாழ்ப்பாணம், ஓக.31

சின்ன வெங்காயத்தின் விலை திடீரென அதிகரித்துள்ளது.

திருநெல்வேலி சந்தையில் முன்னர் கிலோ 40 ரூபாவாக விற்கப்பட்ட சின்ன வெங்காயம் தற்போது கிலோ 60ரூபாவாக அதிகரித்துள்ளது.

தென்பகுதிக்கு கூடுதலான வெங்காயம் கொண்டு செல்லப்படுவதே இந்த விலை அதிகரிப்புக்குக் காரணம் என்று தெரிவிக் கப்படுகின்றது.

இதேவேளை- குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வெங்காயச் செய்கையில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

வெங்காயச் செய்கை அதிகரிப்பதால் விதை வெங்காயத்திற்கும் பற்றாக்குறை நிலவி வருகின்றது. (203-224)

# யாழ். மாநகராட்சி மன்றத்தில் மேயர் அலுவலகம் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.31

யாழ். மாநகராட்சி மன்றத்தில் மாநகர மேயர் மற்றும் உறுப்பினர்களுக்கான அலுவலகம் அமைக்கும் பணிகள் துரித கதியில் இடம் பெற்று வருகின்றன.

கடந்த ஜூலை மாதத்தில் ஆரம்பிக் கப்பட்ட இக் கட்டடப் பணிகளை விரைவாக நிறைவேற்றி முடிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


சுமார் 60 அடி நீளமும் 40 அடி அகலமும் கொண்டதாக அமைக்கப்படும் இக் கட்டடத்தில் சகல வசதிகளும் உள்ளடக்கப்பட்டவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 203-224)

# கால்நடை வளர்ப்போர் கூ.சங்கத்தின் விற்பனை நிலையம் வேலணையில் திறப்பு

யாழ்ப்பாணம், ஓக.31

தீவகம் தெற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கத்தின் விற்பனைக்கிளை ஒன்று வங்களாவடி வேலணையில் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

தீவகம் தெற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் செல்வி பொ. யமுனாதேவி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தீவகப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் பிரதம விருந்தினராகவும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணைப் பிரிவு அமைப்பாளர் சி. சிவராசா , வடக்கு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் வைத்தியகலாநிதி திருமதி வ. அமிர்தலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (9)




# பின் தங்கிய கிராமங்களின் வளர்ச்சிக்கு உதவி வழங்க நாம் தயாராக உள்ளோம்

## இலங்கை வங்கியின் சுன்னாகம் மேற்தரக் கிளை முகாமையாளர் உரை

இணுவில், ஓக.31

பின் தங்கிய கிராமங்களில் வசித்து வரும் மக்கள் மிகுந்த நேர்மையுடனும் நாணயத்துடன் தாம் பெறும் கடன்களைத் திருப்பிச் செலுத்தி வருகின்றார்கள்.

எனவே அவர்களுக்கு தேவையான கடனை வழங்கி அவர்களின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதற்கான சந்தர்ப்பங்களையும் உதவிகளையும் வழங்க இலங்கை வங்கி தயாராக இருக்கின்றது.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கை வங்கியின் சுன்னாகம் மேற்றரக்கிளை முகாமையாளர் எஸ்.பி. அரசகுமார்.

இலங்கை வங்கியின் சுன்னாகம் மேற்றரக்கிளையினர் இணுவில் வட கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்குட்பட்ட 24 சிறுவர்களுக்கான புதிய சேமிப்புக் கணக்கு களை ஆரம்பித்து அதற்கான வைப்புப் புத்தகங்களை உரியவர்களிடம் வழங்கினர்.

இந்த நிகழ்வு அண்மையில் இணுவில் கலாஜோதி சனசமூக நிலை மண்டபத்தில் நடைபெற்றது.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கை வங்கியின் சுன்னாகம் மேற்றரக்கிளை முகாமையாளர் கலந்து கொண்டு சிறுவர்களுக்கான புதிய சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் இணுவில் பிரதேசத்தைச் சேர்ந்த 15 விவசாயிகளுக்கு சுமார் பன்னிரண்டு லட்சம் ரூபா சிறுபோகக் கட னாகவும் 15 பயனாளிகளுக்கு ஏழரை லட்சம் ரூபா சுயமுயற்சிக் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

(203-201-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கில் முடங்கிக் கிடக்கும் கல்வித்துறையை மேம்படுத்தும் திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்

## - நாடாளுமன்றில் சிறில் எம்.பி -

கொழும்பு, ஓக.31

யுத்த சூழ்நிலை, இயற்கையின் சீற்றம், பொருளாதார நிலைமைகள், கல்வி வளங்கள் என்பன வடக்கு,கிழக்கு மாணவர்களின்கல்வியைச் சீர்குலைத்து வருவதாகப் பெற்றோர்கள், கல்விசார் சமூகத்தினர் கவலை தெரிவித்துள்ளனர். எனவே பாடசாலைக் கல்வியைச் சீரமைத்து சாத் தியமான நடவடிக்கை எடுப்பது மிகமிக அவசியமானது. ஆனால் இதன் முதற்கட்டமாக நாட்டில் அமைதியான வாழ்வும் அச்சமற்ற சூழ்நிலையையும் உருவாக்க வேண்டும் என்பதே எங்களது முதன்மையான வேண்டுகையாகும்.



இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சூ.சிறில் கூறியுள்ளார். நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கல்வி சம்பந்தமான ஒத்திவைப்புப் பிரேரணையின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு:-

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய வன்னிப் பிரதேசத்தில் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளால் பல இலட்சக் கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம் பெயர்ந்துள்ளபோதும் அங்கும் பாதுகாப்பு, சுதந்திரம், நிம்மதியின்றி முடங்கிக் கிடக்கின்றனர். இவர்களில் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விசார் ஊழியர்களும் விதிவிலக்கல்ல. கிட்டத்தட்ட 300 பாடசாலைகள் மூடப்பட்டதனால் 70,000 மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். முதலாம் தரத்திற்கு அனுமதிக்கவேண்டிய 8,000 மாணவர்களும் முன்பள்ளிக்கு அனுமதிக்க வேண்டிய 13,000 சிறுவர்களும் உரிய பாதையில் கல்வி கற்கமுடியாத சூழ்நிலைகளில் வாழுகின்றார்கள்.

முதலில் இவர்களது உயிர் வாழ்விற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டியது அரசினதும் கல்வி அமைச்சினதும் பாரிய கடமையாகும்.

வன்னியில் புலமைப்பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை, உயர்தரப்பரீட்சை போன்றவற்றிற்கு தோற்றிய, தோற்றவுள்ள மாணவர்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். மோதல்கள் காரணமாக இடம் பெயர்ந்துள்ளதால் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலைமைகளே காணப்படுகின்றன. அதேவேளை பரீட்சைகளுக்கான ஆயத்தங்களை அச்சமின்றி அமைதியாகவும், நிம்மதியாகவும், நிதானமாகவும் மேற்கொள்ள முடியாது இடைநடுவில் பரீட்சைகளையும், கல்வியையும் கைவிட்ட விரத்திக்கும் வேதனைக்கும் ஆளாகின்றனர். இவர்கள் தாங்கள் தங்கள் சொந்த இடங்களிலிருந்து அச்சமின்றி நிம்மதியாகவே தங்களது கல்வியைத் தொடரவே விரும்புகின்றார்கள்.

அத்துடன் இந்த இடப்பெயர்வால் ஆசிரியர்கள் சிலரும் உயிரிழப்புக்களைச் சந்தித்ததுடன் மக்களோடு மக்களாகத் தற்காலிக கூடாரங்களிலும், பாடசாலை மண்டபங்களிலும் வசதிகளின்றித் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். தென்பகுதி பாடசாலைகளையும், மாணவர்களையும், ஆசிரியர்களையும் ஒப்பிடுகையில் முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையில் தமிழ்ப் பிரதேசப் பாடசாலைகளும், மாணவர்களும், ஆசிரியர்களும் வளர்ந்துவரும் நவீன கல்வி உலகிற்கு ஏற்ப கற்றலை, கற்பித்தலை விருத்தி செய்யமுடியாத நிலையில் உள்ளார்கள். அப்படியிருந்தும் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களினதும் கடின உழைப்பாலும் கடமை உணர்வாலும் மாணவர்களின் கல்வித் தரம் தக்கவைக்கப்படுகிறது. இது பாராட்டிற்குரியது.

எவ்வாறாயினும் கல்வி ஒன்றே தமிழ் மக்களின் நிலையான மூலதனம். இவற்றில் அரசின் இனரீதியிலான பாரபட்சம், புறக்கணிப்புக்கள் தொடருமானால் இது முழுநாட்டிற்கும் பாரிய பின்னடைவாகும். அன்றைய தவறுகளே இன்றைய நெருக்கடிகளுக்குக் காரணமாக அமைந்துள்ளது. இதை அரசும் கல்வி அமைச்சும் உரிய கவனத்தில் கொள்ளவேண்டும்.

மேலும் வடக்கு, கிழக்கில் குறிப்பாக கஷ்டப் பிரதேசங்கள் என அடையாளம் காணப்பட்ட பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்ச்சியாக இருந்து வருகிறது. இதனால் மாணவர்கள் பாரிய சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் மற் றும் உயர்தர வகுப்புகளுக்கான ஆசிரியர் களின் பற்றாக்குறையும் நீடித்து வருகி றது. அத்துடன் வடக்கு, கிழக்கில் போர் நடவடிக்கை, இயற்கையின் அனர்த்தம் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்டுச் சேதமடைந்த பாடசாலைகள் சில தொடர்ந்தும் செயலிழந்த நிலையிலேயே காணப்படுகின்றன.

மேலும் போர்ச்சூழல், கல்விச்சூழல், நெருக்கடிகள், இடப்பெயர்வுகள் காரணமாக வடக்கு, கிழக்கில் உள்ள பல்கலைக் கழகங்கள் செயலிழந்து விடுவதனால் பட்டப்படிப்பைமேற் கொள்ளும் மாணவர்கள் உரியகாலங்களில் தங்களது பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு வெளியேற முடியாதிருக்கிறது. வெளியேறிய மாணவர்களும் உரிய காலங்களில் வேலை வாய்ப்பின்றி நீண்ட காலங்கள் காத்துக் கிடக்கின்றனர். இதனால் பல பட்டதாரிகள் வேலை வாய்ப்புக் கோரி - ஆசிரியர் நிய மனம் கோரி - பல போராட்டங்களை நடத்தி வருகின்றனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள ஆசிரியர் வெற்றிடங்களுக்குப் படித்துப் பட்டம்பெற்ற பட்டதாரிகளுக்கும், தொண்டர் ஆசிரியர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

குறிப்பாகப் போர் நடவடிக்கை காரணமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தவும் பௌதீக வளங்களுடன் பாடசாலைகளைச் சீர்செய்யவும், ஆசிரியர் வெற்றிடங்களைப் போக்கவும் இளவயதினரின் இடைவிலகலின்போது அவர்களுக்குத் தொழில்நுட்பப் பயிற்சி வழங்கக்கூடிய திட்டங்கள் அமைவது மிகவும் அவசியம். இதன் மூலமாகவே நாட்டின் கல்வி அறிவை விருத்தி செய்வதுடன் இளைய தலைமுறையினருக்குச் சிறந்த எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்க முடியும். அதேவேளை காலதாமதமின்றித் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கும் நீதியான தீர்வை முன்வைத்து அதனை நடைமுறைப்படுத்தக்கூடிய காலம் கனிந்துள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தை மீண்டும் நழுவவிடாது அரசாங்கம் காத்திரமான நடவடிக்கை எடுத்து நாட்டில் நிரந்தரமான அமைதியும் சமாதானமும் ஏற்பட்டு அனைத்து இனமக்களும் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் நிம்மதியாகவும் வாழும் சூழ்நிலையை உருவாக்க அரசு விரைந்து செயற்பட வேண்டும் - என்றார்.

**யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் முக்கிய அறிவித்தல்**

30.08.2009 ஞாயிறு யாழ்.பலநோக்குக் .கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

1. ஞாயிறு வீடுமுறை தினமாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.
2. காலை 7-மணி தொடக்கம் இரவு 9-மணி வரை கடை திறந்திருக்க முடிவானது.

செயலாளர் சி.அ.சிவலிங்கம். தலைவர் அ.அல்பேட்.

(ஏ/550538)

# ராசி பலன்

**31-08-2009 முதல் 06-09-2009 வரை**

**பொ.சந்திரலிங்கம்**

### மேஷம்



அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

காரிய சித்தி உண்டு, பிரயாண வாய்ப்பு உண்டு, பணமிருக்கும், உறவினர் அயலவர் விலகியிருக்க விரும்புவார். தாய் நலம், தந்தை நலமில்லை, நல்ல வீடு வாகனம் அமையலாம், மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம், பகைவரால் தொல்லை உண்டு, திருமண வாய்ப்பு பாதிக்கலாம், புதிய முதலீடுகள் அமையலாம், அதிஷ்டம் இருக்காது, தெய்வீக நாட்டம் குறையலாம், தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம், எதிர்பார்ப்புகள் நிறைவேறாது, மன அமைதியுண்டு.

### இடபம்



கார்த்திகை 2, 3, 4. ரோகினி, மிருகசீரிடம் 1, 2

காரிய சித்தியுண்டு, பிரயாண வாய்ப்புண்டு, பணமிருக்கும், உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர், பெற்றோர் நலம், நல்ல வீடு வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர், உடல் நலமுண்டு, பகை விலகும், திருமணவாய்ப்புண்டு, புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு, தெய்வீக நாட்டம் மேலோங்கும், தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும், மன அமைதி இருக்கும்.

### மிதுனம்



மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை,புனர்பூசம் 1, 2, 3

காரியத் தடை இருக்கும், பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம், பணமிருக்கும், உறவினர் அயலவர் விலகி விசுவாசமாக இருப்பர், தாய் நலமில்லை, தந்தை நலம், வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம், மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர், உடல் நலம் பாதிக்கலாம், பகைவரால் தொல்லையுண்டு, திருமண வாய்ப்பு தாமதமாகலாம், புதிய முதலீடுகள் அமையலாம், அதிஷ்டம் உண்டு, தெய்வீக நாட்டம் மேலோங்கும், தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம், எதிர்பார்ப்புகள் நிறைவேறாது, மன அமைதி இருக்காது.

### கடகம்



புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரிய சித்தியுண்டு, பிரயாண வாய்ப்புண்டு, பணப்பற்றாக்குறை நிலவும், உறவினர் அயலவர் பகைகொள்ளக்கூடும், பெற்றோர் நலம், நல்ல வீடு, வாகனம் அமையலாம், மாணவர்கள் கல்வியில் அதிகம் ஆர்வம் காட்டார், உடல் நலம் உண்டு, பகை விலகும் , திருமண வாய்ப்புண்டு, முதலீடுகளால் இலாபம் குறையலாம், அதிஷ்டம் உண்டு, தெய்வீக நாட்டம் மேலோங்கும், தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும், நண்பர்கள் உதவுவார், மனஅமைதி இருக்காது.

### சிம்மம்



மகம், பூரம், உத்தரம் 1

காரிய சித்தியுண்டு, பிரயாண வாய்ப்புண்டு பணமிருக்கும், உறவினர் அயலவர் உதவி செய்வார், பெற்றோர் நலம், நல்ல வீடு வாகனம் அமையலாம், மாணவர்கள் கல்வியில் அதிகம் ஆர்வம் காட்டார், உடல் நலம் பாதிக்கலாம், பகைவரால் தொல்லையுண்டு, திருமண வாய்ப்பு தாமதம் ஆகலாம், முதலீடுகளால் லாபம் குறையலாம், அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும் தொழில்துறை முன்னேறும், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் மன அமைதி இருக்கும்.

### கன்னி



உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2

காரியத்தடை இருக்கும், பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம் பணமிருக்கும், உறவினர் அயலவர் பகை கொள்ளக்கூடும், பெற்றோர் நலம் நல்ல வீடு வாகனம் அமையலாம், மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார், உடல் நலம் பாதிக்கலாம், பகைவரால் தொல்லை உண்டு. திருமண வாய்ப்புண்டு, முதலீடுகளால் லாபம் குறையலாம் தெய்வீக நாட்டம் மேலோங்கும் தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் மனஅமைதி இருக்காது.

### துலாம்



சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம் , பணப்பற்றாக்குறை நிலவும் உறவினர் அயலவர் விலகி இருக்க விரும்புவார். பெற்றோர் நலம், நல்ல வீடு வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார். உடல் நலம் பாதிக்கலாம், பகைவரால் தொல்லை உண்டு திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம், முதலீடுகளால் லாபம் குறையலாம். தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம், எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

### விருச்சிகம்



விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம் , பணப்பற்றாக்குறை நிலவும், உறவினர் அயலவர் பகைகொள்ளக்கூடும். தாய் நலமில்லை, தந்தை நலம், வீடு வாகனம் செலவை ஏற்படுத்தலாம் மாணவர்கள் கல்வியில் அதிகம் அக்கறை காட்டார் , உடல் நலம் பாதிக்கலாம், பகைவரால் தொல்லையுண்டு, திருமண வாய்ப்பு தாமதம் ஆகலாம், முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும், அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும், தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

### தனுசு



மூலம், பூராடம், உத்தராடம் 1.

காரிய சித்தியுண்டு பிரயாண வாய்ப்புண்டு. பணமிருக்கும், உறவினர் அயலவர் விலகியிருக்கவிரும்புவார். தாய் நலம், தந்தை நலமில்லை, நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு, பகைவிலகும், திருமண வாய்ப்புண்டு. முதலீடுகள் அமையலாம், அதிஷ்டம் இருக்காது, தெய்வீக எண்ணம் குறையலாம், தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம், மன அமைதி இருக்கும்.

### மகரம்



உத்தராடம் 2 ,3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம், பணப்பற்றாக்குறை நிலவும், உறவினர் அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலம், நல்ல, வீடு வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும் , திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம் , முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும், தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

### கும்பம்



அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு காலதாமதம் ஆகலாம் , பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் பகை கொள்ளக் கூடும், தாய் நலமில்லை, தந்தை நலமில்லை, வீடு வாகனம் செலவை ஏற்படுத்தலாம், மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும், திருமண வாய்ப்பு தாமதமாகலாம், முதலீடுகளால் லாபம் குறையலாம், அதிஷ்டம் இருக்காது, தெய்வீக நாட்டம் குறையலாம், தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது, எதிர்பார்ப்புகள் நிறைவேறாது, மன அமைதி இருக்காது.

### மீனம்



பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரிய சித்தி உண்டு. பிரயாண வாய்ப்புண்டு, பணப்பற்றாக்குறை நிலவும், உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பார். தாய் நலம், தந்தை நலமில்லை, நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார். உடல் நலமுண்டு, பகை விலகும், திருமண வாய்ப்புண்டு, முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும், அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம், தொழில் துறை முன்னேறும், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும், மன அமைதி இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுக் கல்வியை இங்கிருந்தபடியே யாழ்.மாணவர்கள் தொடரச் சந்தர்ப்பம்

## கால்பதிக்கிறது 'கேற்வே' நிறுவனம் என்கிறார் அதன் பணிப்பாளர்

தெற்கில் கடந்த 12 வருடங்களாக பல கிளைகளைத் திறந்து ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு எதிர்கால நம்பிக்கையை ஊட்டிவரும் 'கேற்வே' கல்வி நிறுவனம் தனது கிளையை யாழ்ப்பாணத்திலும் திறந்து இளம் சந்ததியி னருக்கு வளமான வாழ்வை அமைக்க முன் வந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் தடம் பதிப்பதற்காக அந்த நிறுவனம் நேற்று முன்தி னம் செயன்முறைக் கலந்துரையாடலை நடத்தியுள்ளது.

'உதயன்' நிறுவனம் மேற்கொண்டு வரும் கல்விப் பணியில் ஓர் அங்கமாக இந்த நிறுவனத்தின் சேவையை அந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் அறிமுகப்படுத்தியுள்ளார்.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கிலம் ஆகியவற்றை யாழ்.மாணவர்களுக்கு அறிமுகம் செய்து, அத்துறைகளில் ஊக்கம் கொடுக்கும் நோக்கில் இந்த நிறுவனம் தனது பயிற்சி நிலையம் ஒன்றை இங்கு ஆரம்பிக்கின்றது.

'உதயன் கேட்போர்' கூடத்தில் நடந்த இந்த அறிமுகக் கலந்துரையாடலில் கல்வி மான்கள், பொறியியலாளர்கள், கல்வியதிகாரிகள், மாணவர்கள், ஆசிரியர்கள், துறை சார்ந்த விற்பன்னர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில், நிறுவனத்தின் செயற்பாடுகள், நடந்துவந்த பாதையில் கண்ட முன்னேற்றங்கள், கல்வி வாய்ப்புக்கள் ஆகியன தொடர்பாக விளக்கம் அளிப்பதற்காக அந்தக் கூட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி ஹர்ஸா அலஸ், அந்த நிறுவனத்தின் பட்டதாரிகள் கல்லூரியின் ஆளுநரும் தேசிய கல்விச் சபையின் உறுப் பினருமான பேராசிரியர் வயந்த விஜயசே கரவும் கலந்து கொண்டனர்.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தராகவும், திறந்த பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகவும் அவர் இருந்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த அவர்கள் தமது நிறுவனச் செயற்பாடுகள் தொடர்பாகக் கருத்துக் கூறினர்.

அந்தக் கருத்துக்கள் வருமாறு:-

**கலாநிதி ஹர்ஸா அலஸ்**

சிறுவர்கள் மற்றும் வயது வந்தவர்கள் தமது எதிர்காலத்தை நம்பிக்கையுடன் முன்னெடுக்க வசதியாக பல்வேறு கல்வித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். சர்வதேசத்துடன் தொடர்புகளைப் பேணக் கூடிய வகையிலும் சர்வதேச பல்கலைக்கழகங்கள், நிறுவனங்களில் நம்பிக்கையுடன் இணைந்து உயர்கல்வியைத் தொடரக் கூடிய வகையிலும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறோம்.

ஆரம்பக்கல்வி முதல் உயர்கல்வி வரை மாணவர்கள் தம்மை முழுமையாக ஈடுபடக் கூடியவகையில் ஆங்கிலக் கல்வியை அறிமுகப்படுத்தியுள்ளோம். ஆங்கிலமொழி மூலம் கணனித் துறையில் மாணவர்கள் சாதனைகள் படைக்க முன்னோடியாக ஆங்கில மொழியைப் போதிக்கும் திட்டம் ஒன்றை முதலில் நடைமுறைப்படுத்திவருகிறோம்.

12 வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் ஆரம்பித்த எமது நிறுவனத்தின் செயற்பாடுகள் இன்று கொழும்பில் இரு கிளைகளையும் கண்டி, நீர்கொழும்பு ஆகிய இடங்களில் ஒவ்வொரு கிளைகளையும் அமைத்து பரவலாக்கப்பட்டுள்ளன.

சர்வதேசப் பாடசாலை, பட்டப்படிப்புக்கு பல்கலைக்கழகம் என விரிவுபடுத்தப்பட்டுள்ளதுடன், 33 பயிற்சி நிலையங்களையும் அமைத்துள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் முதற்கட்டமாக பயிற்சி நிலையத்தை அமைக்கவிருக்கிறோம். தொடர்ந்து சர்வதேச பாடசாலை, பட்டப்படிப்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

சர்வதேச பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்காக வெளிநாட்டுக்கோ கொழும்புக்கோ வரவேண்டிய தேவை இனி யாழ். மாணவர்களுக்கு ஏற்படாது. அவர்கள் இங்கி ருந்தவாறே சர்வதேச பரீட்சைகளுக்கு தோற்ற வாய்ப்புக் கிட்டியுள்ளது.

கடந்த காலங்களில் பாதுகாப்புப் பிரச்சினை, போக்குவரத்துப் பிரச்சினை ஆகிய காரணிகளால் எமது நிறுவனத் தின் கல்விச் சேவையை வடக்கு மக்க ளுக்கு வழங்க முடியாது போய்விட்டது. இன்று உருவாகியுள்ள சுமுகமான சூழ் நிலையில் யாழ்.மாணவர்களையும் எமது கல்விச் சேவையில் அரவணைக்க விருக் கிறோம்.

# வெளிநாட்டுச் செலாவணி வீணாவதைத் தடுக்க 3 ஆம் நிலைக் கல்வித் திட்டம்

## முன்னாள் துணைவேந்தர் கூறுகிறார்

**பேராசிரியர் வசந்த விஜயசேகர**

தனியார் துறையிலும் சரி, அரச துறையிலும் சரி 3 ஆம் நிலைக் கல்வியின் அவசி யத்தை வலியுறுத்துவதே எனது முக்கிய பணியாக உள்ளது. ஜி.சீ.ஈ. (சாதாரண) பரீட்சையிலும் சரி, ஜி.சீ.ஈ. (உயர்தரப்) பரீட்சையிலும் சரி உயர் சித்தியைப் பெற முடியாதவர்களின் கல்வி நிலையை உயர்த்துவதே 3 ஆம் நிலைக் கல்வியின் நோக்கமாகும்.

வெளிநாட்டுக் கல்வியைப் பெறுவதற்கு எமது மாணவர் பெரும்தொகைப் பணத்தைச் செலவிடுகிறார்கள். அத்துடன் எமது வெளிநாட்டுச் செலாவணி வீணாகப் போகின்றது. அதைத் தடுத்து நிறுத்துவதற்காக எமது மாணவர்கள் நாட்டுக்குள்ளேயே வெளிநாட்டுக் கல்வியைப் பெற வசதி செய்யப்பட்டுள்ளது. ★

அதன் அடிப்படையில் எமது 'கேற்வே' நிறுவனம் வெளிநாட்டு நிறுவனங்களின் உயர்கல்வி வசதியை நாட்டுக்குள்ளேயே கிடைக்க வசதி செய்துள்ளது.

மாணவர்கள் தமது எதிர்காலத்தை வளமாக்க மூன்றாம் நிலைக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றோம். அதற்கான திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.

தற்போது சூழல் சீராக இருப் பதால், யாழ். மாணவர்க ளின் உயர் கல்வி வாய்ப்புக்களை உறுதிசெய்ய, அவர்கள் வீணாக பெருந்தொகைப் பணத்தை செல விடுவதைத் தவிர்க்கவும் உதவுவதற்கு நாம் முன்வந்துள்ளோம்.

குறைந்த செலவில் உயர்கல்வி வாய்ப்பை யாழ். மாணவர்களும் பெறுவதற்கு 'கேற்வே' நிறுவனத்தின் பணிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. ★



'கேற்வே' கல்வி நிறுவனத்தினால் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கிலமொழிக் கற்கை என்பவற்றை அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்று முன்தினம் 'உதயன்' கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்களே இவை.

இந்நிகழ்வில் 'கேற்வே' கூட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி ஹர்ஸா அலஸ் 'கேற்வே' நிறுவனத்தின் பட்டதாரிகள் கல்லூரியின் ஆளுநரும், தேசியக் கல்விச் சபையின் உறுப்பினருமான பேராசிரியர் வயந்த விஜயசேகர ஆகியோர் கருத்துரை நிகழ்த்துவதை முறையே முதலிரு படங்களிலும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களை அடுத்துள்ள இரு படங்களிலும் ,காணலாம்.

# கிராமத்துக்கு ஒரு திட்டத்தின் கீழ் பழமரச் செய்கையை ஊக்குவிக்க கண்டியிலிருந்து இனிப்புத் தோடைகள்

நல்லூர், ஓக. 31

கிராமத்துக்கு ஒரு திட்டத்தின்கீழ் பழமரச் செய்கையை ஊக்குவிப்பதற்கென கண்டி பிபிலையில் உள்ள விவசாயப் பண்ணையில் இருந்து இனிப்புத் தோடை பழ மரக்கன்றுகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

கிராமத்தில் ஒரு திட்டத்தின் கீழ் நுணாவில் மேற்கு, ஆவரங்கால் மேற்கு, கரணவாய் ஆகிய கிராமங்கள் தெரிவுசெய்யப்பட் டுள்ளன.

இந்தக் கிராமங்களில் கண்டியில் இருந்து எடுத்துவரப்பட்ட தோடைச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட பத்து விவசாயிகளுக்கு ஒவ்வொருவருக்கும் தலா 32 கன்றுகள் வீதம் 320 கன்றுகளும் கத்தரிக்கும் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் விவசாயத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.

இதற்கு 4 ஆயிரத்து 800 ரூபா செலவாகும் என்று கூறப்பட்டது.

பயனாளிகளுக்கு ஒவ்வொருவருக்கும் 2400 ரூபாவைத் திணைக்களம் வழங்கியுள்ளது. மிகுதி 2400 ரூபா பயனாளிகள் தமது சொந்தப் பணத்தில் இருந்து செலவு செய்ய வுள்ளனர்.

உற்பத்தியாளர்கள் இனிப்புத் தோடையை சிறந்த முறையில் உற்பத்திசெய்ய வேண்டும் எனவும் தேவையான ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கத் திணைக்களம் தயாராக உள்ளது எனவும் விவசாயத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார். (203-111)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆன்மீக நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.31

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சுற்றாடலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஆன்மீக நிகழ்வு வரிசையில் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ''துணை'' என்னும் தலைப்பில் [illegible] றோ.க.த.க.பா[illegible] சொற்பொழிவு ஆற்றுவார். (201)

# ஆயிரம் கண்கள் வேண்டும்



மண்ணாளும் மறையோன் ஈசன்
மதிசூடி நடனமாட
கண்கவர் தூர்க்காபுரி அன்னை
களிபேருவகை கொள்ள
விண்ணவர் புடைசூழ்ந்து நிதமும்
வியந்து நல்வேதங்கள் ஓத
பண்ணிசை மேள தாளம்
பரவசம் மூட்டி நிற்க
எண்ணும் வரம் அனைத்தும் அந்த
எழிலரசி வழங்கி வாழ்த்த
விண்ணோ! இது மண்ணோ! என
வானோர் மிக வியக்க
உண்ணாமுலை யாளும் நிதம்
உவந்தே மனம் மகிழ
கண்ணாயிரம் வேண்டும் அந்த
கயிலைக் காட்சிதனைக் காண.

(இன்று 31.08.2009 திங்கட்கிழமை தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கை அம்பாள் சப்பரத்தில் வீதியுலா வந்து தனது பக்தர்களுக்குக் காட்சி தந்தருள்கிறாள்)

விகடகவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண பொதுச்சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) வகுப்பு III / பயிற்சித்தரம் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆள் சேர்ப்பதற்கான

# விண்ணப்பம் கோரல்- 2009

வடக்கு மாகாணப் பொதுச்சேவையில் வெற்றிடமாகவுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) வகுப்பு III / பயிற்சித் தரம் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆள்சேர்ப்பு செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்ட தகைமையுடைய ஆண் / பெண் இருபாலாரிடமும் இருந்தும் விண்ணப்பங்கள் வட மாகாணப் பொதுநிர்வாக பிரதிப்பிரதம செயலாளரினால் கோரப்படுகின்றன. தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் தங்களுடைய விண்ணப்பங்களை விண்ணப்பமுடிவு திகதியான 2009.09.11 ஆம் திகதிக்கு முன்பதாக **பிரதிப் பிரதம செயலாளர், வடமாகாணப் பொதுநிர்வாக செயலகம், கன்னியா வீதி, வரோதய நகர், திருகோணமலை** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**பொது நிபந்தனைகள்**

01. வடமாகாணத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டவராக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பதாரிகள் குறித்த பதவிக்குரிய எல்லாத் தகைமைகளையும் விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்பதாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
03. இவ் ஆள்சேர்ப்பு மூலம் செய்யப்படும் நியமனம் முற்றிலும் ஒப்பந்த அடிப்படையிலானதும் எச்சமயத்திலும் முடிவுறுத்தப்படக்கூடியதுமாகும். இதன் விளைவாக நிரந்தர நியமனம் கோருவதற்கு விண்ணப்பதாரிகள் அருகதையற்றவர்களாவர்.
04. தெரிவு செய்யப்படுபவர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படுவர்.

**தெரிவு செய்யும் முறை**

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களுக்கிணங்க தகுதியானவர்கள் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு அழைக்கப்படுவார்கள். இதில் அவர்களின் தகைமைகள் உறுதி செய்யப்பட்டு நேர்முகப்பரீட்சை சபையின் சிபார்சின் பேரில் நியமன அதிகாரிகளினால் குறித்த ஒப்பந்த நியமனங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பம் வைத்து அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வடமாகாண பொதுச்சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) வகுப்பு III/ பயிற்சித் தரம் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆள்சேர்ப்பதற்கான விண்ணப்பம்- 2009" என குறிப்பிடுதல் வேண்டும்.

**ஆள்சேர்ப்பு தகைமைகள்**

01. விண்ணப்ப முடிவு திகதியில் 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
02. கல்வித் தகைமைகள்

I. மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா பெற்றிருத்தல்

அல்லது

II. தேசிய பயிலுநர் மற்றும் தொழில் நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்

அல்லது

III. இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்பவியில் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்

அல்லது

IV. பயிற்சித் தரம்: அரசாங்க தொழில்நுட்பவியல் கல்லூரியில் தேசிய தொழில்நுட்பவியல் (சிவில்) சான்றிதழ் {NCT (Civil)}, அத்துடன் க.பொ.த (சா/த) பரீட்சையில் இருதடவைக்கு மேற்படாத அமர்வுகளில் மொழி அல்லது இலக்கியம், எண்கணிதம் அல்லது கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகளுடன் மேலும் ஒரு பாடத்தில் திறமைச்சித்தி உட்பட 06 பாடங்களில் சித்தியெய்தியிருக்க வேண்டும்.

**வேதனம்**

பொ.நி.சு 6/2006 (IV) இற்கிணங்க நாளொன்றுக்கு ரூபா 437.33 (ரூபா நானூற்று முப்பத்தேழு சதம் முப்பத்து மூன்று ) வேதனத்திற்கு தாங்கள் உரித்துடையவர் என்பதுடன் காலத்திற்கு காலம் மீளமைக்கப்படும் வாழ்கைச் செலவுப் படியும் தங்களுக்கு வழங்கப்படும்.

வடமாகாண பொது நிர்வாக செயலகம்,
கன்னியா வீதி, வரோதய நகர்,
திருகோணமலை. 29.08.2009

**இ. இரவீந்திரன்,**
**பிரதிப் பிரதம செயலாளர்.**

# மாதிரி விண்ணப்பப் படிவம்

## வட மாகாண பொதுச்சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) வகுப்பு III/ பயிற்சித் தரம் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆள்சேர்ப்பதற்கான விண்ணப்பம்- 2009

01. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர்:
திரு/திருமதி/செல்வி ..............................................

02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்:
தமிழில்: ..............................................
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்தில்): ..............................................

03. தபால் முகவரி:
தமிழில்: ..............................................
..............................................
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்தில்): ..............................................
..............................................

04. பிறந்த திகதி: ..............................................

05. அடையாள அட்டை இல: ..............................................

06. சேவை அனுபவம் பற்றிய விவரம்: ..............................................
..............................................

07. கல்வித் தகைமை

1. க.பொ.த. (சா/த) (புகைப்படப் பிரதியை இணைக்கவும்).

ஆண்டு:.................. சுட்டெண்:......................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

2. க.பொ.த (உ/த) (புகைப்படப் பிரதியை இணைக்கவும்).

ஆண்டு:.................. சுட்டெண்:......................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

3. தொழில்நுட்பத் தகைமை. (புகைப்படப் பிரதியை இணைக்கவும்).

| பெற்றுள்ள தகைமை | வழங்கிய நிறுவனம் | காலப்பகுதி | வலுப்பெறும் திகதி |
|---|---|---|---|
| | | | |

09. விண்ணப்பதாரியின் உறுதியுரை:

1. இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.
2. என்னால் தரப்பட்ட விடயங்கள் பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னராக தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரிய வந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் உள்ளாவேன் என்பதை நான் அறிவேன்.
3. இப்பரீட்சை தொடர்பான நிபந்தனைகள் அனைத்திற்கும் அமைந்தொழுக நான் உடன்படுகின்றேன்.

திகதி:............. ..............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

10. விண்ணப்பதாரியின் வதிவிடத்தை உறுதிப்படுத்தல்:
(கிராம சேவையாளர்/ பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்).

விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற திரு/திருமதி/ செல்வி:.............................. .............................. என்பவரை நான் நன்கு அறிவேன். இவர் வட மாகாணத்தின்.............................. மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

..............................
திகதி:............... உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரது கையொப்பம்

(சி/56052) (இறப்பர் முத்திரையால் உறுதிப்படுத்த வேண்டும்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கை இழக்க வைக்கும் பரம்பரைக் கோளாறு திக்குவாய்

**கேள்வி :** எனது மகன் வயது 7. அவருக்கு திக்குவாய் உள்ளது. இதை எப்படிக் குணப்படுத்தலாம்? இது ஏற்படக் காரணம் என்ன?

**பதில் :** திக்குவாய் என்பதை Stammering என்று மருத்துவத்தில் கூறுவர். பேசும்போது - சொற்கள் தடைப்படாமல் வசனங்களாகத் தொடர்ந்து வராதிருப்பதை திக்குவாய் என்போம். பொதுவாக இந்தப் பிரச்சினை குழந்தை ஐந்து வயதாகும் முன்னரே ஆரம்பத்தித்து விடுகிறது. தொடர்ந்து வளர் இளம் பருவத்தில் இந்தக் கோளாறு அதிகரித்து - குழந்தை பெரியவனாக ஆக - மெல்ல மெல்ல குறைந்துபோய்விடுகிறது. அல்லது இல்லாமல் போய்விடுகிறது.

பேசுவது என்பது உதடு - நாக்கு என்பவற்றின் இயக்கம் மட்டுமே அல்ல. இந்த இயக்கத்தோடு மூளையின் ஒருங்கிணைந்த செயற்பாடும் சேர்ந்ததே பேச்சு. நரம்பு மற்றும் தசைகளின் ஒருங்கிணைந்த செயற்பாட்டில் ஏற்படும் மின் - இரசாயன அதிர்வுகள் மூளையில் இருந்து புறப்பட்டு - பேச்சுக்குரிய தசைகளின் இயக்கங்களை புரிவதால் பேச்சு ஏற்படுகிறது.

எனவே - திக்கு வாய்க்குக் காரணம் என்ன என்பதற்கு ஏதாவது ஒருவிடயத்தை மட்டுமே குறிப்பிட முடியாது. பொது வாகவே - அநேகமான திக்குவாய் கோளாறு உள்ளவர்களின் பரம்பரையிலும் இந்தக் கோளாறு காணப்படுகிறது. திக்கு வாய்க்காரர்கள் தாங்கள் சொல்ல வருவது என்ன என்பது நன்றாகத் தெரிந்தாலும் அடுத்த கணத்தில் - தங்களால் கட்டுப்படுத்த முடியாது திருப்பித் திருப்பிச் சொல்லும் செயற்பாட்டை (Involuntary Repetition) அல்லது பேச்சு ஒலியின் நீக்கப்பட்ட கால அளவை கட்டுப்படுத்த முடியாமல் 'திக்கு'கின்றார்கள்.

நன்றாகச் செய்யவேண்டும் என்ற அழுத்தம், சூழலில் ஏற்படும் திடீர் மாற்றங்களினால் உணர்ச்சி இறுக்கம் (Emotional Strain) ஏற்பட்டு பேச்சுத் திக்கித் திணறி வெளி வருகிறது. குழந்தைகளின் பாடசாலை மாற்றங்கள், வதிவிட மாற்றங்கள், புதிதாக ஒரு சகோதரனோ, சகோதரியோ குடும்பத்தில் பிறத்தல், பெற்றோர்களின் மணவிலக்கு, குடும்பத்தில் பிரச்சினைகள், குழந்தைகளது ஆற்றலுக்கு அதிகமாக பெற்றோர்களது எதிர்பார்ப்புகள் என்பவை இந்த இறுக்கத்தை ஏற்படுத்தும் சில நிகழ்வுகள். இந்த நிகழ்வுகள் - திக்குவதை ஏற்படுத்தினாலும் - பேச்சுப் பயிற்சி நிபுணர் எனப்படும் Speech Therapist இன் ஆலோசனையில் இந்தக் கோளாறை முளையிலேயே கிள்ளிவிட முடியும்.

திக்கித்திக்கிப் பேசும் குழந்தைக்கு பேசும்போது திக்கு வருமோ என்ற பய உணர்வு மனதில் சேர்ந்து கொண்டே இருக் கும். காலம் செல்லச்செல்ல இந்தப் பய உணர்வும் கட்டுப்படுத்த முடியாத திக்கு வாயும் - குழந்தைக்கு - மனவிரக்தி - பதை பதைப்பு, மற்றும் மனக்கலக்கம், வெட்கம், அவமானம் மற்றும் குற்ற உணர்வு, தாழ்வு மனப்பான்மை போன்ற மனப் பாதிப்புகளை உருவாக்கும். தன்னம்பிக்கையை இழக்கவைக்கும். பொதுவாகவே திக்கு வாய் குழந்தைகள் மிகவும் இலகுவாக உணர்ச்சிவசப்படுபவர்கள்.

ஐந்து வயதுக்குள் திக்குவாய் குணமாகாவிடில் - விசேட வைத்திய நிபுணரின் ஆலோசனை பெறப்பட வேண்டும். திக்குவாய் ஒரு நோயல்ல. எனவே மருத்துவ சிகிச்சை எதுவும் இதற் குத் தேவையில்லை. பேச்சுச் சிகிச்சை நிபு ணர் தருகின்ற அறிவுரைகளைக் கண்டிப் பாகப் பின்பற்றவேண்டும். சிகிச்சை வெற்றிபெற - விடாமுயற்சி, ஊக்கம் மற் றும் முக்கியமாக பொறுமை - குழந்தைக்கு மட்டுமல்ல பெற்றோருக்கும் மிக அவசியம்.

சிகிச்சையின் போது மட்டுமல்லாமல் எந்த நேரத்திலும் பெற்றோர் பின்பற்ற வேண்டிய கடமைகள் உண்டு. குழந்தை யுடன் நிறைய அளவளாவுங்கள். குழந்தையும் உங் கள் கலந்துரையா டல்களில் பங்கு பெற ஊக்குவி யுங்கள். பேசும் போது திக்குவது, தடுமாறுவது சாதாரணமானதே என்பதை நினை வில் கொள்ளுங்கள். சாதாரண மனிதர் கூட சிலவேளைகளில் திக்குவது உண்டு. சரியான வார்த்தைகள் வராது தடுமாறுவ துண்டு. உங்கள் குழந்தைக்கு இந்த விடயத்தில் கொஞ்சம் அதிகம் என்று எண் ணிக்கொள்ளுங்கள். திக்கினாலோ, தடுமாறி னாலோ பொருட்படுத்தாமல் குழந்தை சொல்வதற்கு நேரம் கொடுத்துக் கேளுங் கள். இலக்கணத்தைத் திருத்தவோ, சொல் லைத் திருத்தவோ, திருப்பிச் சொல்லவோ முயற்சிக்கவேண்டாம். குழந்தை பேசுவ தைக் கேலி செய்யாதீர்கள். குழந்தைக்கு திக்கு ஏற்படும் சூழ்நிலைகளைக் கண்ட றிந்து - அவற்றைத் தவிருங்கள். அவருக்கு மனதில் உறுதி, தெளிவு ஏற்பட தேவை யானவற்றைச் செய்யுங்கள்.

**கேள்வி :** பெண். வயது 26. கர்ப்பமாக (9 மாதம்) இருக்கிறேன். எனது குழந்தை கருப்பையில், கருப்பை வாசலில் கால் பகுதி இருப்பதுபோல் (Breech) குத்திக் கொண்டிருப்பதாக மகப்பேறு வைத்தியர் கூறுகின்றார். சிலவேளைகளில் குறுக்குப் பாட்டுக்கு இருப்பதாகவும் கூறுகிறார். இப்படி ஒரே நிலையில் தொடர்ந்து இல் லாதிருப்பதால் - சிசேரியன் முறையில்தான் பிரசவம் பார்க்கவேண்டும் என்று அறிவு றுத்துகின்றார். எனக்கு சாதாரண பிரசவம் ஏற்பட வழி இல்லையா? உங்கள் அபிப் பிராயம் வேண்டுகின்றேன்.

**பதில் :** உங்கள் நிலைமையில் சாதா ரண பிரசவ நேரத்தின்போது நீடித்த கால பிரசவம், ஒழுங்கற்ற பிரசவம், பிரசவத் தின் பின்னர் இரத்தப் போக்கு, சாதாரண பிரசவத்தை முயன்று செய்யும்போது குழந் தைக்கு பிரசவ காயங்கள் (Injuries) மற்றும் பிரசவத்தின் போது கீழ்ப் பகுதி முன்னால் வந்து தலை வெளியே வர காலதாமதம் ஏற்பட்டால் குழந்தையின் மூளைக்குச் செல்லும் இரத்தோட்டத்



தடை - குழந்தை யின் மூளையைப் பாதித்தல், மூளை வளர்ச்சியைப் பாதித்தல் என்ற பிரச்சினை கள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. எனவே உங்களுக்கும் உங்கள் குழந்தைக்குப் பாதுகாப்புக் கருதி - சத்திரசிகிச்சை முறை மூலம் பிரசவம் செய் வதே நல்லது என்று நானும் அபிப்பிராயப் படுகின்றேன். இன்றைய காலத்தில் முழுமையான வைத்திய வசதிகள் திறமான மருந் துகள் பாதுகாப்பான மயக்க மருந்து சகலதும் கிடைக்கக் கூடிய சூழ் நிலையில் சிசேரியன் - ஆபத்தில்லாத, பக்க விளைவு களில்லாத - பாதுகாப்பான சத்திரசிகிச்சை என்பது உண்மை. சத்திரசிகிச்சையின் பின் னர் 95 வீதமான தாய்மார்கள், மூன்றாம் நாளே வீடு செல்லமுடியும். இந்த சத்தி ரசிகிச்சையின் பிரதிகூலம் முக்கியமானது என்னவென்றால் - அடுத்தடுத்த பிரசவங்களிலும் சத்திரசிகிச்சை தேவைப்படுவதே ஆகும்.

**கேள்வி :** வயது 25. சிலவேளைகளில் எனது விதை கள் சிறுத்துக் காணப்படுகின் றன. காரணம்


இலவச மருத்துவ ஆலோசனை பெறுங்கள்
நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
நீண்ட கால அனுபவம் உள்ள பிரபல டாக்டரும் விஞ்ஞானத்துறை எழுத்தாளருமான
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம் பதில் தருகிறார்.
இலவச மருத்துவ ஆலோசனை
உதயன்
381, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


என்ன? விந்து உற்பத்தி இதனால் பாதிப் படையுமா?

**பதில் :** ஆணின் விதைகள் உடம்போடு Cremasteric தசைகளால் பிணைக்கப்பட்டுள் ளன. இந்தத் தசைகளின் இயக்கத்தால் விதைகள் - உள்ளே இழுக்கப்படும்போது சிறிதாகவும், வெளியே வரும் போது பெரிதாகவும் தோற்றம் பெறுகின்றன. உடல் அமைப்பு, சூழ வெப்பநிலை என்பவை இந்தத் தசைகளின் இயக்கத்திற் குக் காரணமாக அமைகின்றன. உதாரணமாக குளிரான சீதோஷ்ண நிலையில் விதைகள் உள்ளே இழுக்கப்பட்டு உட லோடு ஒட்டிக் காணப்படும். தொடையின் உட்புறத்தில் தொடுகை உணர்ச்சி ஏற்பட்டாலும் - விதைகள் உள்ளே இழுக்கப்படும். இதை மருத்துவ பரிசோதனையில் Cremasteric என்று அழைப்பர். விதைகளின் அளவுக்கும் விந்து உற்பத்திக்கும் நேரடித் தொடர் பில்லை.



**கேள்வி :** எனக்கு வயது 58. எதுவித கெட்ட பழக்கமும் இல்லை. நீரழிவு நோயோ, இரத்த அழுத்த நோயோ எதுவும் இல்லை. கடந்த மாதங்களாக கொஞ்சத் தூரம் நடந்தால் மூச்சுவாங்குகிறது. நெஞ்சின் இடப்பக்கத்திலிருந்து முதுகுப் புறமாக வலிக்கும். வைத்திய ஆலோசனை களை கேட்ட போது - இந்த கோளாறு இருதயம் சம்மந்தப்பட்ட கோளாறு என்று கூறினார். இதற்கு இதய நோய் நிபுணரின் ஆலோசனை பெறுவது அவசியம் என்றார். இரத்த குழாய்களில் அடைப்பு ஏற்படுவ தால் இப்படி ஏற்படுகின்றது என்றும் விளக்கினார். எனக்கு ஏற்பட்டிருப்பது இரு தய நோயா? இதற்கான சிகிச்சை முறைகள் என்ன? எதுவித கெட்டபழக்கமோ - எதுவித நோய் தாக்கமோ இதுவரை இல்லாத எனக்கு இருதய நோய் வருவதற்கு காரணம் என்ன? மிகவும் குழம்பியுள்ளேன் விளக்கம் தருக.

**பதில் :** நீங்கள் தந்துள்ள அறிகுறி களை வைத்து நோக்குமிடத்து உங்களுக்கு ஏற்பட்டிருப்பது Ishaemic heart disease என்கின்ற இதயதசைகளுக்கு போதிய இரத்தோட்டம் இல்லாததால் ஏற்படும் கோளாறு என்று அனுமானிக்க முடிகிறது இந்நோய் ஏற்பட முக்கிய காரணம் இருதயத்திற்கு இரத்தம் விநியோகிக்கும் Coronary Arteries என்ற இரத்த குழாய்களில் கொழுப்பு அடைவு சேர்ந்து இரத்தோட்டத்தை தடுப்பதுதான். இந்த கொழுப்பு அடைவுகளில் முக்கியமானது கொலஸ்ரோல்.

ஏதாவது நோய்களோ ஏதாவது கெட்ட பழக்கங்களோ இல்லாத உங்களுக்கு ஏன் இந்த நோய் வந்தது என்று நீங்கள் கவலைப்படுவதில் எதுவித அர்த்தமுமில்லை. ஏனென்றால் இந்த கொழுப்பு அடைப்புகள் - நீங்கள் இவ்வுலகில் பிறந்த காலத்திலிருந்தே மெல்ல மெல்ல இரத்தக்குழாய்களில் படியத்தொடங்குகின்றன. பின்னர் எதுவித கெட்ட பழக்கமோ, எதுவித நோயோ இல்லாவிடினும் கூட தொடர்ந்து இந்த கொழுப்பு படிவுகள் படிந்து கொண்டேயிருந்து - ஒரு நாள் திடீரென்று முழுதாக இரத்தக்குழாயை அடைத்து - மாரடைப்பு (Heart Attack) நோயைத் தந்து மரணத்தை விளைவிக்கும். ஆனால் புகை பிடித்தல், மதுபானம், மன இறுக்கம், நீரிழிவு, அதியுயர் இரத்த அழுத்தம் போன்ற காரணிகள் - இந்த கொழுப்பு படிதலை ஊக்குவித்து அதிகரித்து, மாரடைப்பு ஏற்படும் வயதை முன்னோக்கி கொண்டு வந்து விடும். இந்த காரணிகளை - Risk Factors - அபாயகாரணிகள் என்று அழைப்பர். எனவே இந்த இரத்தக்குழாய் அடைப்புகள் மனிதவாழ்வில் தவிர்க்க முடியாதவை. ஆனால் அது முன்னரே நிகழ்வதும் பின்னர் அதன் காலத்தில் நிகழ்வதும் எமது வாழ்க்கை முறையில் தங்கியுள்ளது என்பது மறுக்க முடியாத, மறைக்க முடியாத உண்மையாகும். இப்பொழுது 'எனக்கு ஏன் வந்தது' என்ற ஆதங்கத்தில் எழுந்த உங்கள் கேள்விக்கு விடை கிடைத்திருக்கு மல்லவா?

இனி அடுத்ததாக நீங்கள் செய்யவேண்டியது முழு மருத்துவ பரிசோதனையோடு இருதய நோய்க்குரிய விசேட பரிசோதனைகள். உங்களின் Lipid Profile என்கின்ற கொழுப்பு அளவீடுகள், Echo Cardio-gram, Stress Ecg என்கின்ற நடைபயின்று இருதய இயக்கத்தை அறிகின்ற பரிசோதனை என்பவையாகும். இந்தப் பரிசோதனைகளில் இருதய அடைப்புக்குரிய அறிகுறிகள் அறியப்பட்டால் -Angiogram என்கின்ற - இருதய இரத்தக்குழாய்கள் அடைபட்டிருக்கின் றனவா என்பதை அறியும் பரிசோதனை அவசியம். இருதயத்திற்கு விநியோகிக்கும் முக்கிய மூன்று குழாய்களும் அடைபட்டிருந்தால் - Triple Vessels Disease, பைபாஸ் (By - Pass) சிகிச்சையும், ஒரு குழாய் அல்லது குறைந்தவீதமான அடைப்புக்கு Angioplasty என்கின்ற Stent போடும் சிகிச்சையும் சிபார்சு பண்ணப்படுகின்றன. எனவே காயம் தாழ்த்தாது, ஒரு இருதய நிபுணரின் ஆலோசனையைப் பெறவும்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைவிடா முயற்சியில் இறங்கியுள்ளேன் ஓவியம், சிற்பம் இரு துறைகளில் இன்னும் சாதிப்பேன்



கலைஞர்கள் பிறப்பதில்லை மாறாக இறைவனால் சிருஷ்டிக்கப்படுகிறார்கள் என்று சொல்லிக் கொள்ளலாம். ஒவ்வொரு கலைஞனும் ஒவ்வொரு விதமான கலை நுட்பத்திறன் கொண்டவர்களாக விளங்குகிறார்கள்.

அச்சுவேலியைச் சொந்த இடமாகவும் தற்போது வட்டுக்கோட்டையை தற்காலிக முகவரியாகவும் கொண்ட மாணவன் தங்கராசா பிரசன்னா. இவர் வட்டு.மத்திய கல்லூரியில் உயர்தர வகுப்பில் கலைப் பிரிவில் கற்றுக் கொண்டிருக்கின்றார்.

ஓவியக் கலையிலும் சிற்பக் கலையிலும் மெல்ல மெல்ல அடி எடுத்து நடை பயின்று கொண்டிருக்கின்ற இளங்கலைஞர் தங்கராசா பிரசன்னா ஆரம்பித்திருக்கின்ற கலைப் பயணத்தை உதயன் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

**கேள்வி:** ஓவியம், சிற்பம் போன்ற துறைகளில் உங்களுக்கு ஈடுபாடு வந்தது எப்படி?

**பதில்:** நான் உயர்தரத்தில் சித்திரம் என்றொரு பாடத்தினை தேர்வு செய்து படித்துக் கொண்டிருக்கிறேன். சின்ன வயதிலேயே சித்திரம் என்றால் எனக்கு அலாதி பிரியம். இயல்பாகவே பல படங்களை வரைந்து கொண்டிருப்பேன். வீட்டிலும் வரைந்து வைத்திருக்கிறேன். பின்னர் உயர்தரக் கல்வியைக் கற்கத் தொடங்கிய காலத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியில் சித்திர ஆசிரியராகவும் ஓவியக் கலைஞராகவும் விளங்குகின்ற பார்த்தீபன் ஆசிரியரின் ஓவியக் கண்காட்சியினை பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அவருடைய அத்தகைய கண்காட்சி எனக்குள்ளேயும் ஒரு தூண்டலையும் வெளிப்படுத்தியது. அதன் பின்னர்தான் நானும் இவ்வாறான ஓவியங்களை, சிற்பங்களைப் படைக்க வேண்டும் என்ற ஒரு திடசங் கற்பத்தினை என் னுள்ளே ஏற்படுத்தி னேன்.

**கேள்வி:** நீங்கள் எத்தகைய முறைமையிலான ஓவியங்களை, சிற்பங்களை படைத்திருக்கிறீர்கள்?

**பதில்:** சைவ ஆலயங்களின் சுவர்களில் வரையப்படுகின்ற இறைவனுடைய திருவுருவங்கள் மற்றும் வசந்த மண்டபத்தில் உள்ள திரைச்சீலை ஓவியங்களை வரைந்துள்ளேன். அண்மையில் அச்சுவேலியில் உள்ள காளி அம்பாள் ஆலயத் தில் ஒரு திரைச்சீலையினை வரைந்து கொடுத்துள்ளேன். பாடசாலைகளில் நடைபெறுகின்ற விழாக்களுக்குத் தேவையான சித்திரம் வரைதல் செயற்பாடுகளில் ஈடுபடுவேன்.


**கேள்வி:** இது தவிர உங்களது ஆற்றலை வெளிக்கொணர நீங்கள் ஈடுபட்டுள்ள புதிய முயற்சிகள் பற்றிக் கூற முடியுமா?

**பதில்:** சிற்பங்களைச் செதுக்கியுள்ளேன். சவர்க்காரங்களில், பென்சில் கூர் மற்றும் மரங்களில், அரிசி போன்றவற்றில் தெய்வ சிற்பங்களை செதுக்கியுள்ளதுடன் அவற்றை அண்மையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில், மருதனார் மடம் இராம நாதன் மகளிர் கல்லூரி என்பவற்றில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சியில் காட்சிப்படுத்தக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது.

சந்திப்பு: கவிநேசன்

சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியில் இடம்பெற்ற ஓவியக் கண்காட்சியில் சவர்க்காரத்தில் காலால் சிற்பம் செதுக்கினேன். 20 நிமிடத்தில் 'பூ'வடிவிலான சிற்பத்தினை செதுக்கினேன்.

குத்தரிசியில் பிள்ளையார் சிற்பத்தினை செதுக்கியிருக்கிறேன். பென்சில் கூரிலும் பிள்ளையார் சிலையினைச் செதுக்கியுள்ளேன். இனி கடுகில் சிற்பங்களைச் செதுக்குவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்.



குத்தரிசியில் பிள்ளையார் சிற்பம், சவர்க்காரத்தில் காலால் செதுக்கிய சிற்பம் இவை பிரசன்னாவின் கலைவண்ணம்.

என்னுடைய இத்தகைய வளர்ச்சிக்கு தொடர்ந்தும் என்னுடைய பெற்றோர்கள் அத்துடன் வட்டு. மத்திய கல்லூரி அதிபர் சபாரத்தின சிங்கி மற்றும் எமது கல்லூரியின் சித்திர பாட ஆசிரியர் திரு. திருமதி புஸ்பராணி இவர்களுடன் என்னுடைய மாமா,மாமி திருமதி சிவ சுப்பிரமணியம் போன்றோர் உந்து சக்தியாக விளங்குகின்றனர்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஒக.31

மறவன்புலோ மத்தி. நித்தர்புலம் செல்வ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் சுமார் 10 வருடங்களுக்குப் பின்னர் பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

கடந்த 1999ஆம் ஆண்டு முதல் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப் பட்டிருந்த இப்பகுதியில் அண்மையில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

இதனையடுத்து மேற்படி ஆலயத்தில் 1008 சங்காபிஷேக விசேட பூசை எதிர்வரும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றுப் பின்னர் கிராமசாந்தி, காவல் மற்றும் மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9)

* * *

யாழ்ப்பாணம், ஒக.31

வேலணை வடக்கு இலந்தைவனப்பதி, ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 22ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதில் இன்று திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், நாளை செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (9)

* * *

நவாலி, ஒக.31

ஆனைக்கோட்டை வரத விக்ன விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 26ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 3ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (204-100)


## மனமார்ந்த நன்றிகள்

என்னால் தவறவிடப்பட்ட தங்க நகையினைக் கண்டெடுத்து ஒப்படைத்த வரணி உப தபாலக அஞ்சலர் திரு.பொ.பரமேஸ்வரன் அவர்களுக்கும் மற்றும் கிராம அலுவலர் திரு.ந.இராசகுமாரன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மந்துவில், கொடிகாமம். (88355) மா.தீரா



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1117 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

கன்னி 38 39 49 55

28-08-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 215,403 | 20/- | 4,308,060/- |
| 2 இலக்கங்கள் | 19,828 | 40/- | 793,120/- |
| 1 இல. + லக்கினம் | 19,619 | 60/- | 1,177,140/- |
| 2 இல. + லக்கினம் | 1,799 | 200/- | 359,800/- |
| 3 இலக்கங்கள் | 529 | 1000/- | 529,000/- |
| 3 இல. + லக்கினம் | 48 | 10,000/- | 480,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| மொத்தம் | - | | 8,247,120/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 257,234 | | 8,747,120/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,962,500/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் : யூ.எல்.நந்தசிறி ஹொரண

கைத்தொலைபேசி வெற்றியாளர்: உபாலி ஜயக்கொடி கிரிஉல்ல

2009 செப்டம்பர் 01 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 500470609-7-42 |
| கண்டி | 500455720-6-08 |
| கொழும்பு | 500456139-8-32 |
| கொழும்பு | 500456731-6-14 |
| மட்டக்களப்பு | 500466167-0-23 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஒக.31

ஏழாலை கண்ணகி விளையாட்டுக் கழகம் சிங்கர் நிறுவன அனுசரணையுடனும் வலிகாமம், யாழ்ப்பாணம், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்குகளின் ஆதரவுடனும் நடத்தும் 07 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஏழாலை மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

*அராலி வடக்கு துணவி சென்.ஸ்ரார் விளையாட்டுக்கழகம் எதிர் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம்.

*அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் எதிர் மானிப்பாய் ரெட்றேஞ்சர் விளையாட்டுக்கழகம். (203-86)

* * *

வலி.வடக்கு, ஒக.31

ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலய திருவிழாவை முன்னிட்டு ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம் நடத்தும் 07 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யூனியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

*உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் எதிர் இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக்கழகம்.

*நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் எதிர் ஏழாலை ஞானமுருகன் விளையாட்டுக்கழகம். (203-86)

## வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு

சண்டிலிப்பாய், ஒக.31

சுன்னாகம் வாழ்வகம், யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவை, பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம் ஆகியவற்றுக்கு ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா வரவு செலவு நிதியில் இருந்து வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சொலமன் சூ.சிறில் ஆகியோர் இந்த நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில் வாழ்வகத்துக்கு 50ஆயிரம் ரூபாவும் மாவை சேனாதிராஜா மூத்த பிரஜைகள் பேரவைக்கு 50ஆயிரமும் பண்டத்தரிப்பு ப.நோ. கூ. சங்கத்துக்கு 75 ஆயிரமும் ஒதுக்கியுள்ளனர். (203- 115)


## தவறிவிட்டது

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி என்னும் முகவரியுடைய ஸ்ரீகந்தராசா நிஷான் என்பவருடைய தே.அ.அ. (832560987 V.), விசேட அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், அலுவலக அடையாள அட்டை [illegible] இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இவ் முகவரியுடனோ அல்லது 077[illegible] என்ற தொலைபேசி எண்ணுடனோ தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10.01.1992 உதிர்வு 10.09.2008



அமரர் சத்திராஜ் நடராசா

ஆண்டொன்று ஆனாலும்
ஆறவில்லை எம் மனம்
காலன் அவன் கவர்ந்தாலும்
காலம் எல்லாம் வாழ்ந்திடும்
எழுதி வைத்த ஓவியமாய்
எம்முடனே வாழ்ந்திடுவீர்.

விதானை வளவு,
அச்செழு, நீர்வேலி.

குடும்பத்தினர். (88366)



## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 25 ★ 06 ★ 1950

ஆண்டவன் அடியில் 06 ★ 09 ★ 2003



அமரர் செல்லையா யோகேஸ்வரன்

(முன்னாள் அதிபர், புத்தூர் மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை)

திதி: பூர்வபட்ஷ ஏகாதசி (31.08.2009)

அன்பாய் பேசிப் பண்பாய் வாழ்ந்த - எம் குடும்பவிளக்கே!
ஆண்டுகள் ஆறு ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
காலங்கள் மாறலாம் கோலங்கள் மறையலாம்
கடைசியாய் நிலைத்திருக்கும் உம் நினைவுகளுடன்
ஆறாம் ஆண்டுத் திதியில் உமை நினைத்து வணங்குகின்றோம்.

3ஆம் கட்டை,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர். (88289)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்றல் உபகரணம் வழங்கக் கோரிக்கை


யாழ்ப்பாணம், ஒக.31

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட நவாலி ஹேமலதா ஞாபகார்த்த முன்பள்ளி நிறுவனத்திற்கு கற்றல், கற்பித்தல் உபகரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு நவாலி தெற்கு கிராம அதிகாரி கு. எழிற்செல்வன் கேட்டுள்ளார்.

நவாலி ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த நூலகமும் - சனசமூக நிலையத்தின் கீழ் முன் பள்ளி கல்வி சேவை முழுமையாக இடம் பெறுகின்றது.

இம் மாணவர்களின் கல்வித் தேவைக்காக வைற்போட், கரும்பலகை, பந்துவகைகள், விளையாட்டுப்பொருள்கள், சிறுவர் கதிரைகள், மேசைகள், பாண்ட் வாத்திய கருவிகள், ஊஞ்சல், சீசோ மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி உதவ சர்வதேச தொண்டு நிறுவனங்கள் முன்வரவேண்டும் என கிராம அதிகாரி கு. எழிற்செல்வன் கேட்டுள்ளார்.

(203-9- 302)



யாழ்பாணம் முற்றவெளிப் பகுதி படையினரால் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து துலாம்பரமாகக் காட்சியளிக்கும் யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதிகளைப் படங்களில் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

### ராஜீவ் கொலை விசாரணைக்காக—

## கே.பியை இந்தியாவுக்கு நாடு கடத்துமாறு இலங்கையிடம் கோர புதுடில்லி தீர்மானம்

கொழும்பு, ஒக.31

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரான கே.பி. என அழைக்கப்படும் குமரன்பத்மநாதனை இந்தியாவுக்கு நாடு கடத்துமாறு இலங்கையிடம் வேண்டுகோள் விடுப்பதற்கு இந்திய அரசு தீர்மானித்துள்ளது.

இந்திய உள்துறை அமைச்சக வட்டாரங்களை மேற்கோள்காட்டி இதனைத் தெரிவித்துள்ள இந்தியாவைத் தளமாகக் கொண்ட 'மெயில் டுடே' என்ற இணையத் தளம், ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பின்னரான பாரிய சதித்திட்டம் குறித்து கே.பியிடம் விசாரணை செய்வதற்கு செம்டெம்பரில் இந்தியாவின் மத்திய புலனாய்வுப் பணியக அதிகாரிகள் இலங்கை வரவுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளது.

ராஜீவ் காந்தி படுகெலை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் பல்துறை கண்காணிப்பு அமைப்பின் செயற்பாடு கள் மேலும் ஒருவருட காலத்துக்கு நீடிக்கப் பட்டுள்ளன. கே.பியை விசாரணை செய்யும் - இந்தியாவுக்கு நாடுகடத்தும் நடவடிக்கைகளுக்காகவே இந்த நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது என உள்துறை அமைச்சக வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

பல்துறை கண்காணிப்பு அமைப்பு இந்திய மத்திய புலனாய்வுப் பணியகத்தின் கீழ் செயற்படுவது குறிப்பிடத்தக்கது.

கே.பி. ஓகஸ்ட் மாதத்தில் கைது செய்யப்பட்டார் என இலங்கை அரசு அறிவித்ததைத் தொடர்ந்து பல்துறை கண்காணிப்பு முகவர் அமைப்புக்கு நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது என இந்திய உள்துறை அமைச்சின் முக்கிய அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய புலனாய்வு அதிகாரிகள் அமைப்புகள் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே கே.பியை ஓகஸ்ட் 5ஆம் திகதி இலங்கை அதிகாரிகள் கைது செய்தனர் என்றும் அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

ராஜீவ் காந்தியின் படுகொலையில் தொடர்பு, ஆயுதக் கடத்தல் மற்றும் குற்றச் செயல்களுக்கு உடந்தையாக இருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளை கே.பி.மீது இந்தியா சுமத்தியுள்ளது.

### ராஜீவ் காந்தி கொலைக்கு சர்வதேச சதித்திட்டம்

ராஜீவ் காந்தி கொலையுடன் தொடர்பு பட்ட தனு மற்றும் சிவராசனுக்கு நிதி, ஆயுதங்கள் வெடிமருந்துகள், தற்கொலை அங்கிகள் என்பவற்றை வழங்கினார் என்று கே.பி.மீது புதுடில்லி குற்றச்சாட்டு சுமத்தியுள்ளது. ராஜீவ்காந்தி கொலையை விசாரணை செய்த ஜெயின் ஆணைக்குழு அவருடைய கொலைக்குப் பின்னால் பாரிய சர்வதேச சதித்திட்டம் இருக்கிறது எனத் தெரிவித்திருந்தது. இந்திய அதிகாரிகள் கே.பியை நாடு கடத்தி விசாரிப்பதன் மூலம் இது பற்றிய உண்மைகள் தெரியவரலாம் என இந்திய உள் துறை அமைச்சக அதிகாரி தெரிவித்துள்ளார். பல்துறை கண்காணிப்பு அமைப்பு இந்த சதித்திட்டத்தைக் கண்டுபிடிப்பதற்கு 11 வருடங்களாக மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்து விட்டன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

''கே.பியை கைது செய்வதற்கும் அவர் குறித்த தகவல்களைப் பெறுவதற்கும் 27 நாடுகளுக்கு கடந்த 11 வருடங்களாகக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. அவரது வங்கிக்கணக்கு குறித்த விவரங்களை வழங்குமாறு கடந்த வருடம் ஜேர்மனியிடம் கோரியிருந்தோம். கே.பியை பல வருடங்களாகக் கைது செய்ய முடியவில்லை'' எனத் தெரிவித்துள்ள அந்த அதிகாரி, கே.பியை நாடுகடத்தும் விடயத்தில் இலங்கை ஒத்துழைப்பை வழங்குமென எதிர்பார்க்கிறோம்எனத் தெரிவித்துள்ளார். (சி)

## நல்லூர் ப.நோ.கூ.சங்கத்துக்கு பணிப்பாளர் சபை உறுப்பினர்

நல்லூர் பல நோ.கூ.சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன், கிராம அலுவலர் எஸ். அம்பிகைபாகன், ஆசிரியர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சங்கத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து சங்கத்தின் இயக்குநர் சபை கலைக்கப்பட்டது.

42 லட்சம் ரூபா பெறுமதியான மோசடிகள் சங்கத்தில் இடம்பெற்றுள்ளதாகவும் இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (203- 111-86)

## வறிய மாணவருக்குக் கற்றல் உபகரணம்

அச்சுவேலி சமுர்த்திச் சங்கப் பிரதேசத்தில் வசிக்கும் 40 வறிய மாணவர்களுக்குக் கற்றல் உபகரணம் வழங்கப்படவுள்ளன.

உலக போதைப் பொருள் தினத்தை முன்னிட்டு சமுர்த்தி அதிகார சபையினால் நடத்தப்பட்ட கொடித்தினம் மூலம் சேகரிக்கப்பட்ட நிதி மூலம் கற்றல் உபகரணம் ''சிப்தோறா'' புலமைப்பரிசில் வழங்கப்படுகின்றது.

எதிர்வரும் 03ஆம் திகதி வியாழக்கிழமை அச்சுவேலி சமுர்த்தி வங்கி மண்டபத்தில் நிகழ்வு நடைபெறவுள்ளது. (203- 11)

IDM COMPUTER STUDIES (Pvt) Ltd.
Affiliated University College, Jaffna
Nation's ICT Academy
Pre University College
Affiliated University College

BIT, BCS, ACS
கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் கொழும்பிலிருந்து வருவிக்கப்பட்ட பிரபல விரிவுரையாளர்களினால் ஆரம்பிக்கப்படவுள்ளது.
Week Day 2nd Sep.2009 9.00a.m - 12.00p.m 3.00p.m - 6.00p.m
Week End 5th Sep.2009 9.00a.m - 12.00p.m 3.00p.m - 6.00p.m

IELTS
யாழ் நகரில் பிரபல ஆசிரியர்களால் விரிவுரைகள் நிகழ்த்தப்படுகின்றன.
Week End 5th Sep.2009 9.00a.m - 1.00p.m

HND
இலங்கை மற்றும் சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட Edexcel-UK இன் சான்றிதழ்கள்
B.Sc பட்டப்படிப்பினை இலங்கை மற்றும் UK இல் தொடரமுடியும்.
இலங்கை மற்றும் சர்வதேச ரீதியில் தகவல் தொழில் நுட்பத்துறையில் வேலை வாய்ப்புக்கான உத்தரவாதம்
Week Day 2nd Sep.2009 9.00a.m - 12.00p.m 3.00p.m - 6.00p.m
Week End 5th Sep.2009 9.00a.m - 12.00p.m 3.00p.m - 6.00p.m

E-Kids
சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட Edexcel-UK நிறுவனத்தின் பாடத் திட்டங்களுடன் கூடிய இக்கற்கை நெறியின் முடிவில் BTEC-Dip. ICT சான்றிதழ்கள்
Week Day 2nd Sep.2009 3.00p.m - 6.00p.m
Week End 5th Sep.2009 9.00a.m - 12.00p.m 3.00p.m - 6.00p.m

Diploma Courses
Diploma in Business Management
Diploma in Information Communication Technology
Diploma in PC Assembling & Networking
Diploma in Computerised Accounting Package
Advanced Diploma in Computer Network
BTEC - Edexcel-UK இனால் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ்கள்
Week Day 2nd Sep.2009 9.00a.m - 12.00p.m 3.00p.m - 6.00p.m
Week End 5th Sep.2009 9.00a.m - 12.00p.m 3.00p.m - 6.00p.m

www.idm.lk, www.idm.edu

IDM Computer Studies(Pvt)Ltd.
216, Navalar Road, Jaffna. TP : 021 222 9901 / 021 745 1785
HariKanan,Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

காளிகோயிலடி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் என்னும் முகவரியைச் சேர்ந்த சின்னத்துரை கனகம்மா என்பவரது தேசிய அ.அட்டை (488143018V) 15.08.2009 அன்று யாழ். நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து C.K.P. தொலைத் தொடர்பு நிலையம், கோண்டாவில் என்னும் முகவரியில் ஒப் படைத்துதவவும். தொ.பே. 222 2907 (88390)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர்
தெ.கோபிகாசின் பாசமிகு தந்தை
**தம்பியப்பா தெட்சணாமூர்த்தி**
(இளைப்பாறிய உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலகம், வேலணை)
அவர்களின் மறைவு குறித்து துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராா்த்திக்கின்றோம்.

(88382) மருந்துக் கலவையாளர் நண்பர்கள்.


## டக் முறையில் ரயர்கள் புதுப்பித்தல்

வான், லொறி, பஸ் ஆகியவற்றின் தேய்ந்த ரயர்கள் **டக் முறையில்** புதுப்பித்துக் கொடுக் கப்படும்.

600 X 14 தொடக்கம்
1000 X 20 வரையான
டயர் அளவுகள் புதுப்பிக்க ஏற்றுக்கொள்ளப்படும்.

நோர்தேண் இன்டஸ்றீஸ் (பி) லிமிட்டெட்,
69, பிறவுண் வீதி, கொக்குவில்.


## மரண அறிவித்தல்

### அப்பாக்குட்டி கந்தன் (கற்கண்டு)



கரவெட்டியைப் பிறப்பிட மாகவும், ஸ்ரீ நாரதா வீதியை வசிப்பிட மாகவும் கொண்ட அப்பாக்குட்டி கந்தன் (29.08.2009) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி அப்பாக்குட்டி தம்பதியரின் அன்பு மகனும் நாகியின் (பூரணம்) அன்புக் கணவரும் தவமணி, ராசம், புவனேஸ்வரி, தவராசா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.08.2009) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'சாந்தி இல்லம்',
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி. (88394)

தகவல்:
இ.ரமேஸ் (பேரன்).

## தவறிவிட்டது

இல.3, செம்மணி வீதி, முத்திரைச்சந்தி என்னும் முகவரியுடைய சந்தானலஷ்மி தம்பிராஜா என்பவருடைய தே.அ.அ. (677620293V), விசேட அ.அ., ஒரு தொகைப் பணம், வங்கிப் புத்தகம், சிறிய மோதிரம் என்பவற்றுடன் பேர்ஸ் யாழ்.பஸ் நிலையத்திற்கும் முத்திரைச் சந்திக்கும் இடையில் பருத்தித்துறை செல்லும் பஸ்ஸில் 28.08.2009 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் விலாசத்துடனோ அல்லது கீழ் காணும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும். தொ.பே. 077 4210078. சன்மானம் வழங்கப்படும். (88391)


## நானாவித தேவைகளுக்கும் உகந்த மேட்டுக்காணி விற்பனைக்கு

கைதடிப் புதன்கழிப் பாலத்துக்குக் கிழக் குப் பக்கமாகவுள்ள வளைவில் ஏ 9 வீதியின் வடக்குப் பக்க ஓரமாகவும் "ஆராச்சி கொல்லைக்கு" மேற்குப் பக்கமாகவும் அமைந்துள்ள "விக்கிரமன் தாழ்வு" என்னும் நி.பர.26 2/3 விஸ்தீரண மேட்டுக் காணி விற்பனைக்குண்டு. இரு நன்னீர்க் கிணறுகளும் உண்டு.

*தொடர்பு:* விளம்பர இல. 3934
மே/பா.உதயன். (88393)


## கண்ணீர் அஞ்சலி

பாரதி அச்சக உரிமையாளர்
இ.சங்கரின் மனைவி
**பூரணபாக்கியத்தின்**
மறைவு கேட்டு எங்கள்
அனுதாபத்தைத் தெரிவித்து
அம்மையாரின் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!
பஜனைச் சபையார்,
சுழிபுரம். (சி/560540)

## தனிநாயகம் அடிகளின் 29ஆவது ஆண்டு நினைவு

யாழ்ப்பாணம்,ஒக.31

தமிழ்தூது தனிநாயகம் அடிகளின் 29ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு கோயில் வீதியில் அமைந்துள்ள யாழ்.அருள் ஆச்சிரமத்தில் இடம்பெறவுள்ளன.

நினைவு தினத் திருப்பலியும் சிறப் புரையும் இடம்பெறவுள்ளன. (203)

## கற்றலின் கோபுரங்கள் கருத்தரங்கு இன்று


உலக வங்கி இலங்கை அலுவலகத்தால் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலகத்தின் கேட்போர் கூடத்தில் "கற்றலின் கோபுரங்கள்" மற்றும் "21ஆம் நூற்றாண்டுக்கான உயர் கல்வி" ஆகிய விடயங்களிலான கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் உலக வங்கியின் இலங்கைப் பணிப்பாளர் நௌகோ இஷி, உயர் கல்வி அமைச்சின் செயலாளர் மாலினி பீரிஸ், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க, தென்னாசியப் பிராந்தியத்துக்கான மனித அபிவிருத்திப் பிரிவின் சிரேஷ்ட பொருளியலாளர் ஹர்ஷா அத்துறுப்பான ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். (04)

## தவறிவிட்டது

யோகபுரம், உரும்பிராய் தெற்கு என்னும் முகவரியைச் சேர்ந்த இராகவன் அஜிந்தன் என்பவரது தேசிய அ.அட்டை (900904207V) விசேட அ.அட்டை என்பன 24.08.2009 அன்று முடமாவடி, நாவலர் வீதியூடாக யாழ்ப்பாணம் செல்லும் போது தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத் துதவவும்.
தொ.பே. 0771754684 (88395)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



மண்ணில் 03 ✱ 06 ✱ 1937
விண்ணில் 01 ✱ 08 ✱ 2009

### அமரர் பொன்னம்பலம் தியாகராஜா (மீசைத்தியாகு)
(முன்னாள் ஊழியர், இ.போ.ச.)

கடந்த (01.08.2009) சனிக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (31.08.2009) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.35, இலந்தைக்குளம் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். குடும்பத்தினர். (88375)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் V.K.காணமூர்த்தி



கடந்த 10.09.2008 புதன்கிழமை
சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்
வெள்ளிவிழா நாயகன், நாதஸ்வர மேதை,
அகில உலகப் புகழ் சக்கரவர்த்தி
அமரர் V.K. காணமூர்த்தி
அவர்களின் ஆண்டுத் திவசம் இன்று (31.08.2009)
திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில்
எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம்
தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்
அதனைத் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்).

**குடும்பத்தினர்.**
ஸ்ரேசன் வீதி, காளிகோயிலடி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.


# Become an IT Professional

**Obtain a World Class British Qualification**

BTEC edexcel INTERNATIONAL **HND**

சொந்த மண்ணில்
சர்வதேச அங்கீகாரமுள்ள
பட்டக்கல்வி

A/L தகைமையுடன் மாத்திரம்வெளிநாட்டு உயர்கல்வியினை பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபல பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறுவதிலும் (Admission) உயர்கல்விக்கான Visaக்களைப் பெறுவதிலும் தவறி விடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL,UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டினைப் பெற்றுத்தருவதோடு உயர் கல்விக்கான Visaக்களையும் உறுதி செய்கின்றது. இக்கற்கை நெறிகளை பூர்த்தி செய்து கொள்ளும் மாணவர்களுக்கு வெளிநாடு செல்வதற்கான ஒழுங்குகளை எமது நிறுவனமே ஏற்படுத்திக்கொடுக்கின்றது.

பல நூறு மாணவர்கள் பயனித்த இவ் வெற்றிப்பாதையில் உங்கள் காலடியையும் பதித்துக்கொள்ளுங்கள்



- Higher National Diploma in Computing (General)
- Higher National Diploma in Computing (ICT System Support)
- Higher National Diploma in Computing (Software Development)

*Delivered locally...... Recognized globally......*

Applications for the September 2009 intake are now open

Application accepted with pending A/L Results

| | |
|---|---|
| B.Sc (Hons) 1year at leading universities in UK,USA,Canada,Austalia etc. | 3rd year |
| BTEC HND Computing (General) / (ICT SystemSupport) / (Software Development) | 2nd Year |
| BTEC HNC Computing | 1st Year |
| G.C.E A/L with 2 Subject | |

Edexcel International "A rated centre for the 5th consecutive year"

**IIS CITY CAMPUS**
#200,Sivan Pannai Road,Jaffna.
Tel:021 222 8060 Fax: 021 222 6933
Email:iiscc@sltnet.lk web:iiscitycampus.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை முழுமையாக தன்வசமாக்கியது இலங்கை அணி

நியூஸிலாந்துக்கு எதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டியிலும் இலங்கை அணி வெற்றிபெற்றது. இதன் மூலம் டெஸ்ட் தொடரையும் இலங்கை அணி கைப்பற்றியது.

இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடிய நியூஸிலாந்து அணி, முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியிடம் தோற்றது.

இந்நிலையில், பின்னர் நடந்த இரண்டாவது போட்டியில் வெல்லவேண்டிய கட்டாய நிலையில் களமிறங்கியது நியூஸிலாந்து அணி. நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணிமுதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இலங்கை அணி முதல் இனிங்ஸில் டிலான் சமரவீரவின் சதத்தின் உதவியுடன் 416 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தது. அதேநேரம், நியூஸிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் ரெய்லரின் அரைச் சதத்தின் உதவியுடன் 234 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது.



இரண்டாவது இனிங்ஸை 182 ஓட்டங்கள் முன்னிலையுடன் ஆரம்பித்த இலங்கை அணி, 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 311 ஓட்டங்களைப் பெற்றவேளை 'டிக்ளேர்' செய்துகொண்டது.

இலங்கை அணி சார்பாக துடுப்பாட்டத்தில் டில்ஷான் (33 ஓட்டங்கள்), பரணவிதான (34), டிலான் சமரவீர (25) ஆகியோர் ஓரளவு ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க மஹேல ஜெயவர்த்தன சிறப்பான ஆட்டத்தைக் காட்டி, சதத்தை எட்டும் தருவாயில் (96) ஆட்டமிழந்தார். அணித் தலைவர் சங்கக்கார தனது நிதானம் நிறைந்த ஆட்டத்தினால் சதம் கடந்து அணிக்குத் துணைபுரிந்தார். இவர் 109 ஓட்டங்களைப் பெற்றவேளையில் ஆட்டமிழந்து வெளியேறினார். கப்புகெதர 7 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். அணி 311 ஓட்டங்களைப் பெற்றவேளை டிக்ளேயர் செய்துகொண்டு வெளியேறியது.

நியூஸிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில் விற்றோரி, பட்டோல் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும், ஓ பிறைன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் தனது இரண்டாவது இனிங்ஸில், 493 ஓட்டங்கள் என்ற பெரிய இலக்கைத் துரத்தும் நோக்கில் களமிறங்கியது நியூஸிலாந்து அணி.

அவ்வணி சார்பாக சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய விற்றோரி சதம் கடந்து 146 ஓட்டங்களைக் குவித்தார். பிளின் (50), ஓரம் ஆகியோர் அரைச்சத[illegible]தனர். ஏனைய வீரர்களான இன்ரே[illegible] (7[illegible] ஓட்டங்கள்), குப்தில் (28), ரெய்லர் (27), [illegible]டர் (38), மக்கலம் (13), பட்டேல் (12), ஓ பிறயன் (12) ஓரளவு ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து வெளியேற நியூஸிலாந்து அணியின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. முடிவில் அவ்வணி 10 விக்கெட்டுகள் இழப்புக்கு 397 ஓட்டங்களையே பெற[illegible].

இதன்மூலம் இலங்கை அணி [illegible] ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூஸிலாந்து அணியை வென்றது. மார்ட்டின் எந்த விதத ஓட்டங்களையும் பெறாமல் களத்தில் இருந்தார்.

ஏற்கனவே நடந்து முடிந்த முதல் டெஸ்ட் போட்டியில் வென்று 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகித்திருந்த இலங்கை அணி, இந்த டெஸ்ட்டையும் வென்றதன் மூலம் தொடரை முற்று முழுதாக வழித்துத் துடைத்து, கிண்ணத்தைக் கைப்பற்றிது.

இலங்கை அணி சார்பாக பந்துவீச்சில் கோரத் தாண்டவமாடிய ஹேரத் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். 'சுழல் மன்னன்' முரளிதரன் 3 விக்கெட்டுகளையும், தம்மிக பிரசாத், டில்ஷான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இலங்கை அணியின் வெற்றிக்காக இரு இன்னிங்ஸ்களிலும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய மஹேல ஜெயவர்த்தன ஆட்டநாயகனாகவும், இந்தத் தொடர் முழுவதும் சிறப்பாக விளையாடியமைக்காக டிலான் சமரவீர தொடர்நாயகனாவும் தெரிவுசெய்யப்பட்டார்.

# அமெரிக்க ஓபன் ரென்னிஸ் தொடர் நியூயோர்க்கில் இன்று ஆரம்பம்

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்துப் பெற்ற ரென்னிஸ் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் ரென்னிஸ் போட்டித் தொடரானது இன்று ஆரம்பமாகிறது.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்துப் பெற்ற 4 ரென்னிஸ் போட்டித் தொடர்களுள் அமெரிக்க கிராண்ட்ஸ்லாம் போட்டித் தொடர் மிகவும் பிரபல்யம் பெற்ற ஒன்றாகும்.

வருடந்தோறும் நடைபெற்றுவரும் இந்தத் தொடரின் இவ் வருடத்திற்குரிய தொடர் இன்று அமெரிக்கத் தலைநகரான நியூயோர்க்கில் கோலாகலமாக ஆரம்பமாகிறது.

இந்தப் போட்டித் தொடரில் அனைத்து முன்னணி வீரர்-வீராங்கனைகளும் கலந்து கொள்கின்றனர்.

வழமைபோல் அல்லாது இந்த முறை பரிசுத் தொகையும் மிகவும் அதிகரிக்கப் பட்டுள்ளதுடன், போட்டிக்கான ஏற்பாடுகளும் நவீனமயப்படுத்தப்பட்ட முறையில் தாயர்ப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் போட்டித் தொடரைக் காண்பதற்காக உலகம் முழுவதிலுமிருந்து ரென்னிஸ் ரசிகர்கள் அமெரிக்க நகரில் குவிந்துள்ளனர்.

அந்த வகையில் இன்று ஆரம்பமாகும் இந்தப் போட்டித் தொடரில் விளையாடும் வீர-வீராங்கனைகள் மிகவும் உச்சக் கட்ட மோதலில் ஈடுபடுவார்கள். அத்துடன் இந்தப் போட்டித் தொடரில் பட்டம் வெல்வது என்பது ரென்னிஸ் வீரர்-வீராங்கனைகளின் கனவாகவும் இருக்கின்ற ஒன்று. எனவே, இந்தப் போட்டித் தொடரில் விறுவிறுப்புக்குப் பஞ்சமிருக்கப் போவதில்லை. அதேவேளை, ரசிகர்களுக்கும் நல்விருந்தாகவே அமையும் என எதிர்பார்க்கலாம்.

# நேரு கிண்ண உதைபந்துப் போட்டி; சிரியாவிடம் தோற்றது இந்தியா

புதுடில்லி, ஓக. 31

டில்லியில் நடந்துவரும் நேரு கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் நேற்றுமுன் தினம் நடந்த இறுதி லீக் ஆட்டத்தில் ஏற்கனவே இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுவிட்ட இந்திய-சிரியா அணிகள் மோதின. இந்திய அணியின் தலைவர் பெய்சூங் பூட்டியா உட்பட 4 முன்னணி வீரர்களுக்கு இந்த ஆட்டத்தில் ஓய்வு கொடுக்கப்பட்டிருந்தது. சிரிய அணியிலும் முன்னணி வீரர்கள் ஆடவில்லை. இந்த ஆட்டத்தில் சிரிய அணி 1-0 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வீழ்த்தியது.

இதன் மூலம் அந்த அணி தொடர்ந்து 4ஆவது வெற்றியைப் பெற்றது. இந்திய அணி 2ஆவது தோல்வியைச் சந்தித்தது. வெற்றிக்கான கோலை சிரிய வீரர் அலி தியாப் 19ஆவது நிமிடத்தில் அடித்தார். இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் இந்திய-சிரியா அணிகள் மீண்டும் சந்திக்கின்றன.

## இந்த வார சிறந்த வீரர் டில்ஷான் - கவாஸ்கர்

''இலங்கை அணியின் வீரர் டில்ஷான் தான் இந்த வாரத்திற்குரிய சிறந்த 'சியட்' கிரிக்கெட் வீரர்'' - என இந்திய அணியின் முன்னாள் நட்சத்திர வீரரான சுனில்கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

''நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இலங்கை அணி மிகவும் சிறப்பாக விளையாடியது. அப்போட்டிகளில் டில்ஷான் எழுச்சி கண்டது இலங்கை அணிக்கு மிகப்பெரிய பலமாக அமைந்தது''

இதுதவிர, இலங்கை அணியின் தலைவர் சங்கக்காரா, ஜெயவர்த்தன உள்ளிட்ட துடுப்பாட்ட வீரர்களும் அபார ஆட்டத்தை வெளிப் படுத்தியிருக்கிறார்கள். மற்றொரு வீரரான சமரவீர இரண்டு டெஸ்டிலும் சதம் கடந்திருந்தமை இலங்கை அணிக்கு மிகவும் சாதகமாகும்.

# ஆப்கான் வைத்தியசாலை மீது அமெரிக்கா குண்டுத் தாக்குதல்

## பாக்டிகா மாகாண எம்.பி. கண்டனம்

காபூர், ஓக. 31

ஆப்கானிஸ்தானில் வைத்தியசாலை மீது அமெரிக்க விமானம் குண்டு வீசி தாக்குதல் நடத்தியதற்கு ஆப்கான் எம்.பி. கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானின் கிழக்கு பாக்டிகா மாகாணத்திலுள்ள சர்ஹாவ்ஸா மாவட்ட வைத்தியசாலையில் தலிபான் தீவிரவாதிகளில் சிலர் நுழைந்து, குண்டு காயங்களுக்கு சிகிச்சைப் பெற்று வருகிறார்கள் என ஆப்கானிஸ்தான் இராணுவத்திற்குத் தகவல் கிடைத்தது

இதையடுத்து ஆப்கானிஸ்தான் இராணுவத்தினர் அந்த வைத்தியசாலையை சுற்றிவளைத்து, அங்கிருந்த நோயாளிகளையும், வைத்தியசாலை டாக்டர்கள், ஊழியர்கள் ஆகியோரையும் வெளியே வர வழைத்தனர். ஆனால், அங்கிருந்த தலிபான் தீவிரவாதிகள் இராணுவத்தினரை நோக்கி துப்பாக்கியால் சரமாரியாக சுட்த் தொடங்கினார்கள்.

இதனால் இரு தரப்புகளுக்குமிடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. இந்நிலையில், ஆப்கான் படையினருக்கு ஆதரவாக களமிறங்கிய அமெரிக்கப் படை விமானம், தீவிரவாதிகள் பதுங்கியிருந்த வைத்தியசாலை மீது குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தியது.

இதில் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். அத்துடன், வைத்தியசாலையும் தரை மட்டமானது. தீவிரவாதிகளை கொல்வதற்காக இதர வழிமுறைகளை யோசிக்காமல், வைத்தியசாலை மீது தாக்குதல் நடத்தியது கண்டனத்திற்குரியது என பாக்டிகா மாகாண எம்.பி. காலித் ஃபரூக்கி ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

இருப்பினும், இந்தத் தாக்குதல் நடவடிக்கையை நியாயப்படுத்தியுள்ள ஆப்கானிஸ் தான் சுகாதாரத்துறை அமைச்சர், தீவிரவாதிகள்தாம் வைத்தியசாலையை பதுங்கு குழியாக ஆக்கிவிட்டனர் என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# பன்றிக்காய்ச்சலுக்கு தடுப்பூசி; அமெரிக்க நிறுவனம் அறிமுகம்

நியூயோர்க், ஓக. 31

உலகை மிரட்டிக்கொண்டிருக்கும் பன்றிக்காய்ச்சல் நோய்க்கான தடுப்பூசி மருந்து அமெரிக்க நிறுவனத்தால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

எச் 1, என் 1 என்னும் வைரஸ் கிருமியால் உண்டாகும் பன்றிக்காய்ச்சல் நோய் மெக்சிக்கோ, அமெரிக்கா ஆகிய நாடுகள் உட்பட பல நாடுகளில் பரவி பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த சில மாதங்களாக இந்தியா உள்ளிட்ட நாடுகளிலும் இந்த நோய் பரவி வருகிறது. இந்தியாவில் இதுவரை 90 பேருக்கு மேல் இந்த நோயால் மரணமடைந்துள்ளனர். இந்நிலையில், பன்றிக்காய்ச்சல் நோய்க்கான தடுப்பூசியை அமெரிக்க நிறுவனமான பாக்ஸ்டர் இன்ரர்நஷனல் அறிமுகம் செய்துள்ளது.

இந்த மருந்துகளை வாங்க அமெரிக்காவும், பிரிட்டனும் அந்த நிறவனத்தோடு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளன. எனினும், இந்தியா சார்பில் இதுவரை எந்த ஒப்பந்தமும் செய்துகொள்ளப்படவில்லை.

# வடகொரிய ஆயுதக் கப்பலை தடுத்துக் கைப்பற்றியது எமிரேட்ஸ்

நியூயோர்க், ஓக. 31

ஈரானுக்கு ஆயுதங்கள் விநியோகம் செய்வதற்காக சென்றுகொண்டிருந்த வடகொரிய ஆயுதக் கப்பல் ஒன்று, ஐக்கிய அரபு எமிரேட்ஸால் கைப்பற்றப்பட்டது.

வடகொரியா ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபை தடை விதித்துள்ளது. வடகொரியா எந்த நாட்டுக்காவது கப்பல் மூலம் ஆயுத விநியோகம் செய்ய முயன்றால் அந்த ஆயுதக் கப்பலை தடுத்து நிறுத்தி சோதனை செய்யலாம் என உலக நாடுகளுக்கு ஐ.நாவால் அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

இந் நிலையில், வடகொரிய ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு ஒரு கப்பல் ஈரானை நோக்கிச் சென்றது. இந்தக் கப்பலை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வழி மறித்து கைப்பற்றியது. இந்தக் கப்பலில் சோதனை நடத்தப்பட்டதில் ரொக்கெட் லோஞ்சர்கள், கையெறி குண்டுகள், வெடி மருந்துகள் ஆகியவை இருந்தன. இந்தக் கப்பல் அவுஸ்திரேலியாவுக்குச் சொந்தமானது. இதில் பகாமாஸ் தேசியக் கொடி பறந்தது.

கப்பல் கைப்பற்றப்பட்ட தகவலை ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஐ.நா.பாதுகாப்புச் சபைக்குத் தெரிவித்தது. ஐ.நா.சபையின் தடை கண்காணிப்புக் குழு இந்தத் தகவலை சம்பந்தப்பட்ட 2 நாடுகளுக்கும் தெரிவித்தது. அத்தோடு 15 நாள்களுக்குள் இதுபற்றி தங்கள் தரப்பு நிலையையும், விளக்கத்தையும் தெரிவிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்தக் கப்பலில் எண்ணெய் துரப்பண பணிக்கான கருவிகள் கொண்டு செல்லப் படுகின்றன எனக் கூறிக்கொண்டு திருட்டுத்தனமாக ஆயுதங்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளன என ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தெரிவித்துள்ளது. ஐ.நா.சபையின் தடையை வடகொரியாவும், ஈரானும் சேர்ந்தே மீறி உள்ளன என்று ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சகோதரர்களின் கல்லறைகளுக்கருகில் எட்வர்ட் கென்னடியின் உடல் அடக்கம்

வாஷிங்ரன், ஓக. 31

புற்றுநோய்க்குப் பலியான அமெரிக்க செனட்டர் எட்வர்ட் கென்னடியின் உடல் ஆர்லிங்டன் தேசிய கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஆயிரக் கணக்கான அமெரிக்கர்கள் கலந்துகொண்டனர்.

சகோதரர்களான முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எவ்.கென்னடி, றொபேர்ட் கென்னடி ஆகியோரின் கல்லறைகளுக்கருகில் இவரது உடல் அடக்கம் செய்யப் பட்டது.

அமெரிக்காவில் ஜனநாயகக் கட்சி சார்பில், எட்வர்ட் கென்னடி நீண்டகாலமாக செனட்டராக இருந்தவர். இறுதிச் சடங்கில் இடம்பெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் ஜனாதிபதி ஒபாமா கலந்துகொண்டார். அவர் எட்வர்ட் கென்னடியின் சேவைகளைப் புகழ்ந்து பேசினார்.

எட்வர்ட் கென்னடியின் மகள் கராவும் புற்றுநோயால் அவதிப்பட்டு வருகிறார். இவரும் பாஸ்டன் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுவருகிறார். இவர் குணமாக வேண்டும் என எட்வர்ட் கென்னடி தினமும் பிரார்த்தனை நடத்தி வந்துள்ளார் என அவரது குடும்பத்தினர், தாம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இறுதிச் சடங்கிற்கு முன்னர் எட்வர்ட் கென்னடியின் உடல் ஜோன் எவ்.கென்னடி அருங்காட்சியகத்தில் இறுதி மரியாதைக்காக வைக்கப்பட்டிருந்தது. மக்கள் நீண்ட வரிசையில் நின்று அவருக்கு இறுதி மரியாதை செலுத்தினர். 50 ஆயிரம் பேர் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தியுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜினாமாச் செய்வார் அத்வானி? எதிர்க்கட்சித் தலைவராகிறார் சுஷ்மா!

## கட்சித் தலைவர் பதவி ஜெட்லிக்கு; விரைவில் அறிவிப்பு




புதுடில்லி, ஒக. 31

நாடாளுமன்ற மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் எல்.கே.அத்வானி அந்தப் பதவியை ராஜினாமாச் செய்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அந்தப் பொறுப்பு சுஷ்மா சுவராஜுக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கட்சியின் தேசிய தலைவராக பதவி வகிக்கும் ராஜ்நாத் சிங்குக்கு பதிலாக அந்த இடத்தில் அருண் ஜெட்லி வருவார் என்றும் தெரியவருகிறது. ஜெட்லியின் நாடாளுமன்ற மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் பதவி வெங்கைய நாயுடுக்கு வழங்கப்படுகிறது.

பரபரப்பான இந்த மாற்றங்கள் நேற்றுமுன்தினம் பாரதிய ஜனதாத் தலைவர்களுக்கும் ஆர்.எஸ்.எஸ். தலைவர்களுக்கும் இடையே நடந்த ஆலோசனையில் முடிவு செய்யப்பட்டது எனக் கூறப்படுகிறது.

ஆனால் இரு தரப்பினரும் அதை மறுத்தனர். எனினும் இன்று அல்லது நாளை அது பற்றி அறிவிக்கப்படும் என பெயர் சொல்ல விரும்பாத ஒரு தலைவர் தெரிவித்தார்.

தேர்தலில் பா.ஜ.க. படுதோல்வி அடைந்ததை தொடர்ந்து அக்கட்சியில் குழப்பம் ஏற்பட்டது. தோல்விக்குக் காரணம் என்ன என்பதில் தலைவர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ஒருவர் மீது மற்றொருவர் குற்றஞ்சாட்டினர். தேர்தல் வியூகம் வகுத்த அருண் ஜெட்லிக்கு மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் பதவி கொடுத்ததை யஷ்வந்த் சின்கா சாடினார்.

வாலறுந்த பட்டமாக கட்சி தள்ளாடுகிறது. அத்தனை தலைவர்களும் வீட்டுக்குப் போக வேண்டும் என்று அருண் ஷோரி கொந்தளித்தார். ராஜஸ்தானில் சட்டசபை எதிர்க்கட்சி தலைவர் பதவியை ராஜினாமாச் செய்யுமாறு மேலிடம் சொன்னதற்கு வசுந்தரா ராஜே முடியாது, என்னை நீக்கிப்பார் என புரட்சிக்கொடி தூக்கினார்.

இந்த நிலையில் ஜின்னாவைப் புகழ்ந்து ஜஸ்வந்த்சிங் புத்தகம் எழுதி வெளியிட்டார். உடனே அவரை கட்சியில் இருந்து நீக்கி ராஜ்நாத் சிங் அறிவித்தார். அந்த விரக்தியில் அத்வானி மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை வீசினார் ஜஸ்வந்த் சிங்.

கந்தகார் விமான கடத்தலில் தீவிரவாதிகளை விடுவிக்க முடிவெடுத்தது தனக்கு தெரியாது என்று அத்வானி கூறியது பொய் என்பது அதில் ஒன்று. இதனால் அத்வானி வெளியே தலைகாட்ட முடியாத நிலை ஏற்பட்டது. வாஜ்பாய் ஒதுங்கி விட்டதால் சமரசம் பேசவும் வழிகாட்டவும் கட்சியில் யாரும் இல்லை.

இதன் எதிரொலியாக, இளைஞர்கள் பொறுப்புக்கு வர முதியவர்கள் வழி விட வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் கூறிய யோசனையை ஒவ்வொருவராக ஆதரித்துப் பேச தொடங்கினர். இதைத் தொடர்ந்து பகவத்தை சுஷ்மா சுவராஜ், அருண் ஜெட்லி, வெங்கைய நாயுடு, ஆனந்தகுமார் ஆகியோர் சந்தித்தனர்.

தலைமையில் மாற்றம் செய்ய வேண்டியதன் அவசியம் பற்றி விவாதிக்கப்பட்டது. அதை அத்வானியிடம் தெரிவிக்கச் சொன்னார் பகவத். அதன்படி அத்வானி வீட்டுக்கு தலைவர்கள் சென்றனர். கட்சிப் பூசலை தீர்க்கும் திட்டம் பற்றி விளக்கினர்.

இதையடுத்து ஆர்.எஸ்.எஸ். தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் மாலையில் பகவத்தைச் சந்தித்தார் அத்வானி. 90 நிமிடம் பேசினார்கள். அதன் விவரங்களை வெளியிட பா.ஜ.கவும், ஆர்.எஸ்.எஸ். இயக்கமும் மறுத்து விட்ட போதிலும், கட்சியின் அதிகாரபூர்வ அறிவிப்பு மிக விரைவில் வெளியாகும் என்று தெரிகிறது.

## பன்றிக்காய்ச்சல் பலி 98

புனே, ஒக. 31

இந்தியா முழுவதும் 98 பேர் பன்றிக் காய்ச்சலுக்கு பலியாகியுள்ளனர். நேற்றுமுன்தினம் மட்டும் 5 பேர் இறந்தனர்.

மராட்டிய மாநிலம் புனே நகரில் ரோபாலி ஜோரே என்ற 26 வயது கர்ப்பிணி பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தார். முதலில் அவர் தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு இருந்தார். பின்னர் அவர், புனே நகர அரச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவரது நிலைமை மோசமானது. நேற்றுமுன்தினம் அதிகாலையில் அவர் இறந்தார்.

புனேயில் கும்பகார் என்பவரும் சிகிச்சை பலனின்றி இறந்தார்.

கர்நாடகத்தில் நேற்றுமுன்தினம் 2 பேரும், அகமதாபாத்தில் ஒரு பெண்ணும் இறந்தனர். இதையடுத்து பன்றிக்காய்ச்சலுக்கு பலியானோர் தொகை 98 ஆனது.

# சர்வதேசம் இலங்கையை நிர்ப்பந்தித்து தமிழருக்கு விடுதலை வழங்கவேண்டும்

## இயக்குநர் சீமான் வலியுறுத்து



சென்னை, ஒக. 31

மஹிந்த ராஜபக்ஷ, தமிழர்களை விடுவிக்கும் விடயத்தில் வாக்குத் தவறிவிட்டார். இதனால், இலங்கை மீது சர்வதேச நாடுகள் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் - என்ற இயக்குநர் சீமான் கூறினார்.

நேற்றுமுன்தினம் தூத்துக்குடியில் ஊர்வலம் நடத்த முன்னர் அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

நாம் தமிழர் இயக்கத்தின் போராட்டம் சிங்களப் பயங்கரவாதத்திற்கு எதிரானது. மஹிந்த ராஜபக்ஷ தமிழர்களை விடுவிக்கும் விடயத்தில் வாக்குத் தவறிவிட்டார்.

இதில் சர்வதேச நாடுகள் உடனடியாகத் தலையிட்டு முகாம்களிலுள்ள 3 லட்சம் தமிழர்களை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.

சர்வதேச நாடுகள் உடனடியாக இலங்கையை நிர்ப்பந்தித்து தமிழர்களுக்கு விடுதலை கிடைக்கச் செய்ய வேண்டும். அனைத்து உலக நாடுகளும் இலங்கையின் மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும்.

அவுஸ்திரேலியாவில் இந்திய மாணவன் தாக்கப்பட்டால் அது மட்டும் இங்கு பிரச்சினையைக் கிளப்புகிறது. தமிழக மீனவர் கடலில் சுடப்பட்டால் இந்திய மீனவனாகக் கருதப்படுவதில்லை.

கடந்த தேர்தலில் இலங்கைத் தமிழர் பிரச்சினையை கையில் எடுத்த அரசியல் கட்சிகள் தோல்வி கண்டன என்பது தவறான கருத்தாகும். நாம் தமிழர் இயக்கத்தை அரசியல் இயக்கமாக மாற்ற இருக்கிறோம் - என்றார்.

# இலங்கையில் தமிழர்கள் நிம்மதியாக வாழ இந்தியா முழுக்கவனம் செலுத்த வேண்டும்

## கருணாநிதி வேண்டுகோள்



சென்னை, ஒக. 31

இலங்கையில் அவதிப்படுகின்ற தமிழர்கள் நிம்மதியாக வாழ மத்திய அரசு இன்னும் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும் - என்று முதல்வர் கருணாநிதி கூறினார்.

சென்னை தலைமை செயலகத்தில், செய்தியாளர்களின் கேள்விகளுக்கு முதல்வர் நேற்றுமுன்தினம் பதிலளித்தார். அதன் விவரம் வருமாறு -

கே - போர் முடிந்து இலங்கையிலே பல மாதங்கள் ஆன போதிலும், இன்னும் மூன்று லட்சம் தமிழர்கள் திறந்தவெளி சிறைச்சாலையில் வாழ்கின்ற சூழ்நிலை பற்றி இந்திய அரசுக்கு நீங்கள் வலியுறுத்துவீர்களா?

ப - நாங்கள் இந்திய அரசுக்கு தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டு வருகிறோம். இந்திய அரசு இதிலே இன்னும் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். இப்போது செலுத்தப்படுகின்ற கவனம் போதுமானதாக இல்லை என்று அதாவது இலங்கையிலே முள்வேலிக்கு இடையிலே சிக்கி, மழை தண்ணீரில் நனைந்து கொண்டிருக்கின்ற அப்பாவி தமிழ் மக்களுக்குப் போதுமானதாக இல்லை என்பதையும் இன்னும் போதுமான அளவுக்கு அரசு நடவடிக்கை தேவை என்பதையும் தெரிவித்து வருகிறார்கள். அதை நானும் மத்தியிலே உள்ள பிரதமர் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் போன்றவர்களுக்கு உடனுக்கு உடன் தெரிவித்து வருகின்றேன்.

நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழகத்தின் சார்பாக மத்தியிலே அமைச்சர்களாக இருப்பவர்கள் வாயிலாகவும் - மாநிலங்களவை உறுப்பினர்கள் வாயிலாகவும் வலியுறுத்தி தெரிவித்து வருகிறேன். உடன் நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் வாக்குறுதி அளித்திருக்கிறார். அந்த வாக்குறுதியை விரைவிலே நிறைவேற்றி இலங்கையிலே இன்னமும் அவதிப்படுகின்ற தமிழர்கள் நிம்மதியாக வாழ்வதற்கு நடவடிக்கை எடுப்பார் என்று நம்புகிறேன்.

கே - தமிழக அரசின் சார்பில் இலங்கை தமிழர்களுக்கு அனுப்பப்பட்ட பொருள்கள் போய் சேர்ந்து விட்டனவா?

ப - போய்ச்சேர்ந்து விட்டன.

கே - டில்லியிலே ஒரு பத்திரிகையாளர் எழுதிய புத்தகத்தில், போர் நடைபெற்றபோது இந்திய அரசு மறைமுகமாக ஹெலிகொப்டர் உட்பட பல ஆயுதங்களை இலங்கை அரசுக்கு அனுப்பியது என எழுதப்பட்டிருக்கிறதே?

ப - ஆயுதங்களோ, போருக்கு தேவையான கருவிகளோ எதையும் இந்திய அரசு அனுப்பவில்லை என்று பலமுறை மத்தியிலே உள்ள பிரதமர் உட்பட அமைச்சர்கள் சொல்லியிருக்கிறார்கள்

# முள்வேலிக்குள் உள்ள தமிழரை விடுவிக்க வலியுறுத்தி சீமான் தலைமையில் பேரணி

சென்னை, ஒக. 31

இலங்கையில் முள்வேலி முகாம்களுக்குள் அடைக்கப்பட்டுள்ள 3 லட்சம் தமிழர்களை விடுவிக்கக் கோரி 'நாம் தமிழர் இயக்கம்' சார்பில் இயக்குநர் சீமான் தலைமையில் நேற்றுமுன்தினம் தூத்துக்குடியில் ஊர்வலம், பொதுக்கூட்டம் நடைபெற்றன.

இலங்கை அரசால், முள்வேலி முகாமுக்குள் வைக்கப்பட்டுள்ள 3 லட்சம் தமிழர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அவர்களை சொந்த இடத்தில் சுதந்திரமாக வாழ அனுமதிக்க வேண்டும். இந்தப் பிரச்சினையில் சர்வதேச நாடுகள் தலையிட்டு உடனடித் தீர்வு காண வேண்டும். இலங்கை மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைளை வலியுறுத்தி 'நாம் தமிழர்' இயக்கம் சார்பில் தூத்துக்குடியில் நேற்றுமுன்தினம் மாலை பேரணி நடந்தது.

பேரணியின் பொழுது சிலம்பாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. நாம் தமிழர் இயக்க மாநில ஒருங்கிணைப்பாளர் இயக்குர் சீமான் தலைமை வகித்தார்.

பெரியார் திராவிடர் கழகத்தினர் ஈழமக்களின் நிலையைச் சித்திரிக்கும் வகையில் காயக்கட்டுகளுடன் ஊர்வலம் வந்தனர்.

ஊர்வலம் திருச்செந்தூர் வீதியிலுள்ள காமராஜ் கல்லூரி அருகில் இருந்து புறப்பட்டது. லெவிஞ்சிபுரம், பெருமாள்புரம், திருச்செந்தூர் ரோடு, தேவர்புரம் ரோடு, அண்ணாசிலை வழியாக பொதுக்கூட்டம் நடக்கும் பாலவிநாயகர் கோயில் தெருவை அடைந்தது.

துணை இயக்குநர்கள் ஐகோ, தாமிரா, மித்திரன், வெற்றிகுமார் மற்றும் நெல்லை, குமரி, இராமநாதபுரம், விருதுநகர், மதுரை, சென்னை உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து தமிழ் ஆர்வலர்கள், சட்டத்தரணிகள், பெண்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இதில் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானோர் கறுப்பு நிறத்திலும், விடுதலைபுலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் படம் வரையப்பட்ட ஆடைகளையும் அணிந்திருந்தனர். பிரபாகரன், முத்துக்குமரன் மற்றும் புலிப் படங்களை கையில் ஏந்தியபடி சென்றனர்.

# செயலிழந்தது சந்திரயான்; அதிர்ச்சியில் விஞ்ஞானிகள்!

பெங்களூர், ஒக. 31

பெங்களூரிலுள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) 'சந்திரயான்-1' செயற்கைக்கோள் புவிக்கட்டுப்பாட்டு மையத்துடனான தொடர்பை இழந்துள்ளது.

இதனால் இந்திய விஞ்ஞானிகள் அதிர்ச்சியிலும் சோகத்திலும் ஆழ்ந்துள்ளனர்.

இதுகுறித்து பெயர் வெளியிட விரும்பாத இஸ்ரோ அதிகாரி ஒருவர் கூறியவை வருமாறு -

இஸ்ரோ கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து சந்திரயான்-1 செயற்கைக்கோளை தொடர்பு கொள்ள முடியவில்லை. தகவலை அனுப்ப முடியவில்லை. செயற்கைக்கோளில் இருந்தும் எந்தத் தகவல்களும் புகைப்படமும் கிடைக்கவில்லை. சுருக்கமாகச் சொன்னால் அந்த செயற்கைக்கோள் செயல் இழந்த பேச முடியாத ஊமைப் பொருளாகி விட்டது. இனிமேலும் சந்திரயான் திட்டங்களைத் தொடர முடியாது - என்றார்.

இதற்கிடையே இஸ்ரோ செய்தித் தொடர்பாளர் சதீஷ் கூறுகையில்,

சந்திரயான் செயற்கைக்கோளில் இருந்து பெங்களூர் அருகே உள்ள பையலாலு விண்வெளி கட்டுப்பாட்டு மையத்துக்கு சனிக்கிழமை அதிகாலை 12.30 மணிவரை தகவல்கள் கிடைத்து வந்தன. அதன் பின்னர் 1.30 மணியளவில் சந்திரயானுடனான ரேடியோ தொடர்பு முழுவதுமாக துண்டிக்கப்பட்டது.


சந்திரயானுக்கும் புவி கட்டுப்பாட்டு மையத்துக்கும் இடையேயான தகவல் தொடர்பு திடீரென துண்டித்துப் போனது. தொடர்பு இழந்து போனதற்கான காரணங்கள், கோளாறுகள் குறித்து பின்னர் தெரியவரும் - என்றார்.

சந்திரயான் -1 மற்றும் சந்திரயான்-2 செயற்கைக்கோள்களின் திட்ட இயக்குநரான தமிழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி எம்.அண்ணாத்துரை கூறியவை வருமாறு -

இந்தியாவின் நிலவுத் திட்டம் இத்துடன் முடிந்துவிட்டது. செயற்கைக்கோளுடனான தொடர்பை இழந்துவிட்டோம். ஆனாலும் சந்திரயான், தொழில்நுட்ப ரீதியில் தனது பணிகளை நூறு சதவிகிதம் கச்சிதமாக முடித்தது.

அதேபோல அறிவியல் ரீதியிலும் தனது பணிகளை 95 சதவீதம் முடித்தது. செயற்கைக்கோள் செயல் இழந்ததற்கான காரணத்தையும் உண்மையில் என்ன நடந்தது என்பதையும் ஆய்வு செய்வோம் - என்றார்.

# விஜய்யுடன் மல்லுக்கட்டும் தனுஷ்: நிதானமாகக் காய்நகர்த்தும் ரஜினி?



சென்னை, ஒக. 31


விஜய்யின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட மறைமுகமாக ரஜினிகாந்த் முயல்கிறார் என்று கூறப்படுகிறது. இதற்கு தனது மருமகன் தனுஷை வைத்து இராஜதந்திரமாகக் காய் நகர்த்துகிறாராம் ரஜினி.

காங்கிரஸில் சேரப்போகிறார் விஜய். இது தான் தமிழ்நாட்டைப் பிடித்து உலுக்கிக் கொண்டிருக்கும் செய்தி. 'வேட்டைக்காரன்' வெளியாவதற்கு முன்பே இந்த வைபவம் நடந்து விடும் போலிருக்கிறது.



அதற்கு கட்டியம் கூறுவது போல தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தங்கபாலுவின் பதில் அமைந்திருக்கிறது. சில தினங்களுக்கு முன் ராகுல் காந்தியை விஜய் நேரில் சந்தித்தார். விஜய் ரசிகர்களை குறி வைத்திருக்கும் இளைஞர் காங்கிரஸ், அப்படியே ரஜினி ரசிகர்களுக்கும் வலை வீசி வருகிறது.

இந்நிலையில் செல்வாக்குப் பலத்தை விஜய்யின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட மறைமுகமாக ரஜினி முயல்கிறார் என்று கோடம்பாக்கத்தில் கூறப்படுகிறது.



'அழகிய தமிழ் மகன்' வெளியான நேரத்தில்தான் பொல்லாதவன் வந்தது. பொல்லாதவன் ஹிட். 'அழகிய தமிழ் மகன்' தோல்வியடைந்தது.

'வில்லு' வெளியான நேரத்தில்தான் 'படிக்காதவன்' வந்தது. அதிலும் தனுஷ் படம் ஹிட். விஜய் படம் தோல்வி.

இந்த நிலையில் 'வேட்டைக்காரன்' வெளியாகும் நேரத்தில் தனுஷின் 'குட்டி' வெளியிடப்படலாம் எனக் கூறப்படுகிறது.

மறைமுகமாக நகர்த்தப்படும் இந்தக் காய்கள் ஒவ்வொன்றும் ரஜினியால் நகர்த்தப்படுகிறது என்பது தான் கோடம்பாக்கத்தில் உலா வரும் பரபரப்பு செய்தி.

சிம்பு - தனுஷ் போட்டி என்று வெளியில் பேசப்படுவதை விட, தனுஷ் - விஜய் போட்டி என்று பேசப்படுவதைத்தான் விரும்புகிறாராம் மாமனார் ரஜினி. அதனால்தான் இந்த ராஜதந்திரம் என்று கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





காரைநகர் வியாவில் ஐயனார் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கணபதீசுவரக்குருக்கள் நூலகம், கணனிப் பயிற்சி நிலையம் ஆகியவற்றின் திறப்பு விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள். கலாநிதி சிவஸ்ரீ க.வைத்தீசுவரக்குருக்கள் நூலகக் கட்டடத்தினை நாடாவெட்டி திறந்து வைப்பதனை முதலாவது படத்திலும், காரைநகர் முன்னாள் உதவி அரசாங்க அதிபர் வே.சாம்பசிவம் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதை இரண்டாவது படத்திலும், கணபதீசுவரக் குருக்களின் திருவுருவப் படத்தினை சிற்பி சரவணபவன் திரைநீக்கம் செய்து வைப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.
*(படங்கள்: டர்ணிகன்)*

# உடனடித் தேவைகளை பூர்த்தி செய்யுமாறு மீள் குடியமர்ந்த மக்கள் அரச அதிபரிடம் கோரிக்கை

## அல்லைப்பிட்டி, மண்கும்பானுக்கு விஜயம் செய்தபோது

யாழ்ப்பாணம், ஓக. 31

அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்கள் தமது உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யுமாறு கோரியுள்ளனர்.

நேற்று அங்கு விஜயம் மேற்கொண்ட யாழ். அரச அதிபர் கே.கணேஷிடம் இந்தக் கோரிக்கையை அப் பிரததேச மக்கள் விடுத்துள்ளனர்.

மண்கும்பான் பகுதியில் பெரும்பாலும் அனைத்து வீடுகளுமே சேதமடைந்த நிலையில் மாரியம்மன் கோயிலில் தங்கியுள்ள மக்கள் தமக்கு உடனடித் தேவையாக தற்காலிக வீடுகள் அமைப்பதற்குரிய மரங்கள், சீற் முதலியவற்றை அவசரமாகத் தந்துதவுமாறு கேட்டுக்கொண்டனர்.

அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதி மக்கள் தமது வாழ்வாதாரப் பிரச்சினைக்கு வேண்டிய அத்தியாவசியத் தேவைகளை வழங்குமாறும் விவசாயிகள் தமக்கு முள் கம்பிகள், கம்பிக் கட்டைகள் உட்பட விவசாய உள்ளீடுகள் வழங்க வேண்டும் எனவும் கோரினர்.

மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள உடன் அதற்கான நவீன தொழில் உபகரணங்களைத் தந்துதவுமாறும் அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மண்கும்பான் வீதியில் புனரமைப்புச் செய்யப்படாத பகுதிக ளைப் புனரமைத்து இந்தப் பாதை யினூடாக ஏற்கனவே இடம் பெற்றிருந்த பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமா றும் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதற்கு போக்குவரத்துச் சேவை மிகவும் தேவையாக உள்ளது எனவும் மக்கள் அரச அதிபரிடம் சுட்டிக்காட்டனர்.

மக்களின் வாழ்வாதார நடவடிக் கைகளை மேம்படுத்தவும் தற்காலிக வீடுகளை அமைப்பதற்காக அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியைக் கோரி முக்கிய மானவற்றை நிறைவேற்றித்தர நடவடிக்கை எடுப்பதாக அரச அதிபர் உறுதி கூறினார்.




இந்த நிகழ்வில் வேலணைப் பிரதேச செயலர் மு. நந்தகோபாலன், மீன்பிடி கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (1-111)

# விடுவிக்கப்பட்ட இந்துக் குருமாருக்கு புனர்வாழ்வு அளிக்க ஏற்பாடு செய்க

## அரச அதிபரைக் கோருகிறது இந்து அமைப்புக்களின் ஒன்றியம்

யாழ்ப்பாணம், ஓக. 31

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட இந்துக்குருமாரின் குடும்பங்களுக்கு புனர்வாழ்வு அளிக்க ஆவன செய்யுமாறு அரச அதிபரை இந்து அமைப்புக்களின் ஒன்றியம் கோரியுள்ளது.

ஒன்றியத்தின் நிர்வாக சபையின் கூட்டம் நேற்றுமுன்தினம் நல்லை ஆதீனத்தில் இடம்பெற்றபோது இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த இந்துக் குருமாரையும் அவர்களது குடும்பத்தினரையும் விடுவிப்பதற்கு உதவிய அரச அதிபர் உட்பட அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இன்னமும் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள எஞ்சிய இந்துக் குருமார்களையும் பொதுமக்களையும் கூடிய விரைவில் விடுவிக்குமாறு அரசாங்கத்தைக் கோருவது என்று முடிவு செய்யப்பட்டது. (1-5)

## கும்பாபிஷேகதின சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஓக.31

அராலி ஆகாயக்குளம் விநாயகர் தேவஸ்தான கும்பாபிஷேக தின மணவாளக் கோல நவோந்தர சகஸ்ர மஹாசங்காபிஷேகம் நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதற்கான பூர்வாங்கக் கிரியைகள் நாளை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவிருக்கின்றன. (1)

## பஸ் கட்டணம் விரைவில் உயரும்?

பஸ் கட்டணத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பான இறுதி முடிவை எதிர்வரும் வாரங்களில் அறிவிக்கவுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாகப் போக்குவரத்து ஆணைக் குழுவிற்கு தாம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளனர் என்று சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக் குழு தனது விருப்பை தெரிவித்துள்ள போதிலும், அதன் பணிப்பாளர் வெளிநாட்டிற்குப் பயணம் மேற்கொண்டுள்ளமையால் பஸ் கட்டணத்தில் உயர்வை ஏற்படுத்த சற்று தாமதம் ஏற்பட்டுள்ளது என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்க வட்டாரங்கள் மேலும் தெவித்தன.

எனினும் எதிர்வரும் வாரங்களில் பஸ் கட்டணத்தை [illegible] அறிவிக்கப்படும் என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

## 'டிமோ' மோட்டார் நிறுவனத்தின் காட்சிக் கூடம் நாளை திறப்பு

யாழ்ப்பாணம், ஓக.31

கடந்த 70 வருடகாலமாக வாகன விற்பனையில் ஈடுபட்டுவரும் 'டிமோ' நிறுவனம் தனது கண்காட்சிக் கூடத்தை நாளை செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் திறக்கவுள்ளது.

நாளை காலை திறந்து வைக்கப்படவுள்ள காட்சிக் கூடம் வாகனங்களை மட்டுமல்லாது, வாகனங்களுக்கான உதிரிப் பாகங்களையும் கொள்வனவு செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது என்று 'டிமோ' நிறுவன நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

'டிமோ'வின் காட்சிக் கூடம் யாழ். நகரில் ஸ்ரான்லி வீதியில் அமைக்கப்பட்டுள்ளது. (அ-1)

## அக்கரைப்பற்றில் சூடு; பொதுமகன் காயம்!

அக்கரைப்பற்று, திருக்கோவில் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் பொதுமகன் ஒருவர் காயமடைந்தார்.

திருக்கோவில் பகுதியில் இரு கட்சிகளுக்கு இடையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்திலேயே வீதியால் சென்று கொண்டிருந்த யோகநாதன் சுரேஷ்குமார் (வயது 31) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்தார். காயமடைந்தவர் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## திஸநாயகம் வழக்கில் இன்று தீர்ப்பு

கொழும்பு, ஓக.31

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜே.எஸ். திஸநாயகம் தொடர்பான வழக்கு விசாரணைகளின் தீர்ப்பு, கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தால் இன்று வழங்கப்படவிருக்கிறது.

இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையிலான ஆக்கங்களை ஊடகங்களில் வெளியிட்டார் என அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினால் திஸநாயகம் தொடர்ச்சியாக 425 நாள்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## முக்கிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.31

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், சேவைக்கால ஆலோசகர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (1)

## பொது அறிவுப் போட்டி முடிவு திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், ஓக.30

யாழ். நகர்மைய றோட்டறக் கழகத்தினால் நடத்தப்படுகின்ற பொது அறிவு, நுண்ணறிவுத் தேடல் 12 இற்கான முடிவு திகதி அடுத்த மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்கு முன்னர் மாணவர்கள் விடைத் தாள்களை அனுப்பிவைக்குமாறு கழகத்தின் செயற்றிட்ட இயக்குநர் கேட்டுள்ளார். (1-06)

# தமிழ்பெண் விசா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணைக்கு உத்தரவிட்டுள்ள அதேவேளை, வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் பீட்டா ஹெய்ஸை நேரில் அழைத்து இது குறித்து விளக்கம் கோரியுள்ளார்.

அங்கையற்கன்னி கிருஸ்ணபிள்ளை என்ற 40 வயது பெண்ணுக்கே பிரிட்டிஷ் தூதரகம் இவ்வாறு உதவியுள்ளது என வாராந்த அமைச்சரவை மாநாட்டில் ஜனாதிபதி தெரிவித்ததுடன் இது தொடர்பாக விசாரணைகளை 'மேற்கொள்ளுமாறு வெளிவிவகார அமைச்சரைப் பணித்தார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பிட்ட பெண் பிரிட்டனின் ஹீத்ரு விமான நிலையத்துக்குச் செல்வதற்கு உதவுமாறு பிரிட்டிஷ் விமான நிலைய அதிகாரிகளைக் கோரும் கடிதமொன்றை, கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகம் வழங்கியுள்ளமை தெரியவந்துள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிரிட்டன் எல்லை முகவர் அமைப்பைச் சேர்ந்த இராஜதந்திர அந்தஸ்துள்ள சோர்னா குருக்ஸ் என்னும் அதிகாரியே குறிப்பிட்ட பெண்ணுக்கு உதவினார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்த பெண்ணுக்கு விசாவை பிரிட்டிஷ் தூதரகம் வழங்கவில்லை. அதே வேளை, அவர் நேரடி விமானத்தில் அந்த நாட்டிற்குச் செல்வதற்கான உதவிகளைத் தூதரகம் செய்துள்ளது. அவருக்கு உதவுவதற்காக இராஜதந்திரியொருவரைத் தூதரகம் விமான நிலையத்துக்கு அனுப்பி வைத்துள்ளது என்றும் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிரிட்டிஷ் தூதரகம் இவ்வாறு வேறு பலருக்கும் உதவியதா என்ற கோணத்திலும் விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குறிப்பிட்ட யுவதிக்கு உரிய விசா ஏன் வழங்கப்படவில்லை என்பதே மிக முக்கியமான கேள்வியாகவுள்ளது என்றும் அரச தரப்பு தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்த விவகாரம் தொடர்பாக இன்று மீண்டும் வெளிவிவ்கார அமைச்சருக்கும் பிரிட்டிஷ் தூதுவருக்கும் இடையில் மீண்டும் சந்திப்பு இடம்பெறலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பிட்ட பெண்ணுடன் பிரிட்டிஷ் தூதரக அதிகாரி மல்கம் லிவிஸ் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு சென்றிருந்தார். இலங்கை குடிவரவு - குடியகல்வு அதிகாரிகள் குறிப்பிட்ட தமிழ் பெண்ணிடம் விசா இல்லாததை சுட்டிக்காட்டிய வேளை பிரிட்டனுக்கு சென்றதும் அவருக்கு விசா வழங்கப்படும் என்று சோர்னா குரூக்ஸ் விமான நிலைய அதிகாரிகளிடம் கூறினார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டன் உறுதி மொழியளித்த பின்னர் தாங்கள் அவருக்கு அனுமதி வழங்கினார்கள் எனத் தெரிவித்துள்ள குடிவரவுத் துறை அதிகாரி, ஏன் குறிப்பிட்ட பெண் அவசர அவசரமாக அனுப்பப்பட்டார் என்பதே சந்தேகத்தை உண்டுபண்ணியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டோவுக்குள் இருந்து கொண்டு நடிகர்கள் என்று கூறியவர்கள் இராணுவச் சீருடை அணிந்திருந்தனர்!

## துப்பாக்கிகள், கைக்குண்டுகளையும் பொலிஸார் மீட்டனர்

இரண்டு ஓட்டோ வாகனங்களுக்குள் இருந்தவர்கள் மீது சந்தேகம் கொண்ட பொலிஸார், கேட்டபோது தாம் நடிகர்கள் என்று அவர்கள் கூறினார்கள்.

ஆனால் பொலிஸார் விட்டுவைக்க வில்லை. கீழே இறக்கிச் சோதித்தார்கள். அவர்கள் ஐவரும் இராணுவச் சீருடைகளை உள்ளே அணிந்திருந்தது மட்டுமன்றி கைத் துப்பாக்கிகள், கைக்குண்டுகளையும் வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

பொலிஸார் அவர்களை மடக்கிப் பிடித்து கைது செய்தனர். இச்சம்பவம் நேற்றுக்காலை சிலாபம் கைக்குளம் பகுதியில் இடம்பெற்றது.

சிலாபம் குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரி வி.மல்தெனிய இத்தகவலைத் தெரிவித்தார்.

கைக்குளம் பகுதியில் நிறுத்தி வைக் கப்பட்டிருந்த இரு ஓட்டோக்களில் அமர்ந் திருந்த இவர்கள் மீது சந்தேகம் கொண்ட பொலிஸார் அவர்களை விசாரணை செய்த போது, தங்களை நடிகர்கள் என அவர்கள் அடையாளப்படுத்தியுள்ளனர்.

அதன்பின்னர் அவர்களை சோதனைக் குட்படுத்தியபோது ஆடைக்குள்ளாக இராணுவ சீருடைகளை அணிந்திருந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்போது, இவர்களிடமிருந்து கைத் துப்பாக்கிகள், கைக்குண்டு மற்றும் போலிக் கைத்துப்பாக்கிகள் ஆகியன கைப்பற்றப் பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்கள் மாதம்பை, ஆராய்ச்சிகட்டு மற்றும் அவிசா வளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் பொலிஸார் தெரிவித்தனர்.

## புலிச்சந்தேக..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் என சந்தேகிக்கப்படும் ஆயிரக் கணக் கானவர்கள் கைது செய்யப்படுகின்றமை யால் அவர்களுக்கு எதிரான வழக்குகள் நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கின்றன. அவ்வழக்குகளைத் துரிதப்படுத்துவதற்கு பூரண நீதிமன்ற அதிகாரங்களைக் கொண்ட ஆணைக்குழுவொன்றை நிறுவு வது பற்றி அரசு ஆலோசித்து வருகின்றது.

இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தபின்னர் உயர் நீதிமன்றங்களில் கடமையாற்றும் நீதிபதிகளைக் கொண்ட ஆணைக்குழுவை அமைக்கவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## ஒரு முகாமில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகதிகள் தாக்கப்பட்ட சம்பவத்தை தான் நேரில் கண்டதாகவும் தண் ணீருக் குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதா கவும் கழிப்பறை வசதி கூடப் போதியளவு இல்லை என்றும் அந்த முகாமைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் கூறியதாக தமி ழோசையில் தெரிவிக்கப்பட்டது.

முகாம் வாழ்க்கை மிக மோசமாக இருப் பதாகவும் கூடாரங்களில் அளவுக்கு அதி கமானவர்கள் தங்க வைக்கப்பட்டிருப் பதால் இடநெருக்கடி ஏற்பட்டிருப்பதா கவும் மற்றொருவர் தமிழோசைக்குத் தெரி வித்திருக்கிறார்.

இதேவேளை முகாம்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருப்பதாக பி.பி.ஸி. தெரிவித்தது. (அ-1)

## முகாமிலுள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு மேலும் ஈழத் தமிழர்கள் துன் பத்தை அனுபவிக்கவே முடியாது. இந்திய அரசு இதில் உடனடியாகத் தலையிட்டு முகாம்களில் உள்ள தமிழர்களைக் காப் பாற்ற வேண்டும்.

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி சென்னை சென்ரல் ரயில் நிலையத்தில் ரயில் மறியல் போராட்டம் நடத்தப்படும். பெரி யார் திடலில் இருந்து அன்று காலை 10 மணிக்கு ஊர்வலமாகச் சென்று போராட்டத் தில் ஈடுபட உள்ளோம் - என்றுள்ளது.

## வடக்கின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மரியாதையை ஏற்றுக் கொண்ட பின்னர் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அப்போது மேலும் தெரிவித் தவை வருமாறு:-

வடக்கில் பணியாற்றும் படையினர், அரசு மேற்கொள்ளும் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு தமது முழு ஒத்துழைப்பை யும் வழங்குவர்.

'விடுதலைப்புலி கள் அமைப்பை முழுமையாக அழித்த படையி னர் அபிவிருத்திப் பணியிலேயே தற்போது ஈடுபட் டுள்ளனர். மக்க ளுக்குத் தேவை யான சகல நடவ டிக்கைகளையும் நாம் மேற்கொண்டு வருகின்றோம். சகல துறைகளி லும் மக்களுக்கு உதவிகளை வழங்கு கிறோம்.

2005 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை 51 ஆவது படையணியின் தள பதியாக யாழ்ப் பாணத்தில் பணி யாற்றியுள்ளதால், இங்கு வாழும் மக் களின் உணர்வு களை நான் நன்கறி வேன். மக்களின் தேவைகளை அறிந்து அவர்க ளின் மேம்பாட்டுக் காகப் பணியாற்று வேன் - என்றார்.

## ஒன்றரை இலட்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட திகதி ஆறு மாதங்களால் தாமதப் பட்டதால் 40 ஆயிரம் ஆசிரியர்கள் இப் பதிவியுயர்வுக்குத் தகுதி பெற்றுள்ளனர். நாடெங்குமுள்ள அரச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களும், தனியார் பாடசாலை ஆசிரியர்களும் இப் பதவியு யர்வுக்குத் தகுதி பெறுவார்கள் எனக் கல் வியமைச்சின் செயலாளர் நிமல் பண்டார வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

பதவியுயர்வுக்குத் தகுதிபெற்றுள்ள சகல ஆசிரியர்களுக்கும் அதை வழங்கு வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள் ளுமாறும், அது சம்பந்தமான முரண்பாடு கள் அல்லது இடையூறுகள் ஏற்படின் அவை தமது நேரடிக் கவனத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டும் எனவும் அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பதவியுயர்வு வழங்குவதன் மூலம் ஏற்படக்கூடிய மேலதிக நிதி பற்றிய கணிப்பீடும் செய்யப்படவேண்டும் என அமைச்சின் சுற்றறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது எனக் கல்விய மைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-சி)

## கட்டுநாயக்காவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் போதே இவர்கள் கைது செய்யப் பட்டனர்.இவ்வாறு கைது செய்யப்பட்ட வர்களை தடுத்து வைத்து விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக கட்டுநாயக்க பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## ஐ.நா. பொதுச்சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், பிரதமர் ரட்ணசிறி விக் கிரமநாயக்கா ஒரு சிறு குழுவுடன் இந்தக் கூட்டத் தொடரில் கலந்துகொள்வார் என்று இப்போது தெரிவிக்கப்படுகிறது.

பிரதமரின் வெளிவிவகார ஆலோசகர், பிரதமரின் செயலாளர் மற்றும் பிரத்தியேக செயலாள்ர் ஆகியோர் பிரதமருடன் நியூ யோர்க் செல்ல உள்ளனர் என்றும் இணை யத்தளம் மேலும் தெரிவித்துள்ளது.

## 'சனல் - 4'

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அக்கட்சியின் பொதுச் செயலாளரும், எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்கா நேற்று உதயனுக்குத் தெரிவித்தவை வருமாறு:-

'சனல் - 4' தொலைக்காட்சியில் காண் பிக்கப்பட்டுள்ள வீடியோக் காட்சி மூலம் எமது படையினருக்கும், எமது நாட்டுக் கும் அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது. இதன் உண் மையை உடனடியாக அறிவதன் மூலம் தான் அந்த அபகீர்த்தியை நீக்க முடியும்.

இதை நாம் சந்தேகத்துடன் பார்க் கின்றோம். ஆனால், சிலர் இதை உண்மை என்றும் நம்பியிருக்கின்றனர்.

இந்த வீடியோக் காட்சி எமது நாட் டுக்கு எதிரான சதியாகவும் இருக்கலாம். எது எப்படி இருப்பினும், அரசு உடனடி யாக இது தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும்.

### பிரிட்டனில் உள்ள தூதுவர் தூங்குகிறாரா?

இந்த வீடியோக் காட்சி பிரிட்டனில் ஒளிபரப்பப்படுவது குறித்து ஏற்கனவே 'சனல் - 4' தொலைக்காட்சி முன்கூட்டியே பிரசாரம் செய்திருக்கும். பிரிட்டனில் உள்ள எமது நாட்டுத் தூதரகம் விழிப் படைந்திருந்தால் இந்தக் காட்சியை ஒளிபரப்பவிடாமல் தடுத்திருக்கலாம். ஆனால், அங்குள்ள எமது தூதுவரோ தூங்கிக்கொண்டி ருக்கிறார்.

உண்மையில் எமது அரசு சர்வ தேச நாடுகளுடன் சரியான முறையில் இராஜதந்திர உற வைப்பேணாமையே இந்த மாதிரியான நிலைமைக்குக் காரணம். சரியான உறவை அரசு பேணிவந்தால் இந்நாட்டுக்கு எதி ரான இந்த மாதிரியான பிரசாரங்களை இல்லாமற் செய்யமுடியும்.

இந்த வீடியோக் காட்சி உயர் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தியும் செய்யப்பட் டிருக்கலாம். இது தொடர்பாக விசா ரணை நடத்துவதன் மூலம்தான் இதன் பின்ன ணியில் உள்ளவர்களை இந்நாட்டுக்கும் உலகத்திற்கும் பகிரங்கப்படுத்த முடியும்.

இந்நாட்டுக்கும், உயிர்த்தியாகம் செய்து பயங்கரவாதத்தை இல்லா தொழித்த படையினருக்கும் அப்கீர்த்தி ஏற்படு வதைத் தடுக்கும் கட்டாய கடமை இந்த அரசின் கையில்தான் உள்ளது. அதை அரசு சரிவரச் செய்யவேண்டும் - என்றார்.


**வேலைக்கு ஆள்தேவை**

MDF போட்டில் தளபாடம் செய்யக்கூடிய, அனுபவம்முள்ள ஆள்தேவை.

தொடர்பு 021 222 2846

இல.65,டேவிட் வீதி,யாழ்ப்பாணம்.

**கட்டடம் வாடகைக்குண்டு**

சாவகச்சேரி நகரில் AGA அலுவலகம் முன்பாக A-9 பிரதான வீதியில் அமைந்தி ருக்கும் 6000 சதுர அடி கொண்ட மூன்று மாடிக் கட்டடம் பகுதியாகவோ, முழுமை யாகவோ வாடகைக்கு விடப்படும் .

தொடர்பு 0777177592

**மீண்டும் மலிவான விலையில்...**

- Intel 1.6 Ghz Processor
- Intel Chip D945GCLF Motherboard
- 250GB SATA Hard Disk
- 1 GB DDR II Ram
- ATX Casing
- DVD Writer
- 15" LCD Monitor
- Optical Mouse
- Keyboard
- UPS 650W

37000/- MW1

- Intel 2.8 Ghz Pentium Processor
- Intel Chip Asrock G31 M-S Motherboard
- 160GB SATA Hard Disk
- 1 GB DDR II Ram
- ATX Casing
- DVD Writer
- 15" LCD Monitor
- Optical Mouse
- Keyboard
- UPS 650W

41000/- MW2

- Intel 2.2 Ghz Dual Core Processor
- Intel Chip Foxconn G31 Motherboard
- 250GB SATA Hard Disk
- 1 GB DDR II Ram
- ATX Casing
- DVD Writer
- 19" LCD Monitor
- Optical Mouse
- Keyboard
- UPS 650W

48500/- MW3

- Intel 2.5 Ghz Dual Core Processor
- Intel Chip Asrock G31 Motherboard
- 250GB SATA Hard Disk
- 1 GB DDR II Ram
- ATX Casing
- DVD Writer
- 19" LCD Monitor
- Optical Mouse
- Keyboard
- UPS 650W

49500/- MW4

- Intel 2.6 Ghz Dual Core Processor
- Asus P5 KPL-AM Motherboard
- 320GB SATA Hard Disk
- 1 GB DDR II Ram
- ATX Casing
- DVD Writer
- 19" LCD Monitor
- Optical Mouse
- Keyboard
- UPS 650W

50000/- MW5

- Intel 2.8 Ghz Core 2 Duo Processor
- Intel Chip Intel DG31 PR Motherboard
- 320GB SATA Hard Disk
- 1 GB DDR II Ram
- ATX Casing
- DVD Writer
- 19" LCD Monitor
- Optical Mouse
- Keyboard
- UPS 650W

56500/- MW6

| Printer | | Scanner | | SUBWOOFER | |
|---|---|---|---|---|---|
| HP 1560 | 4300/- | Mustek | 5500/- | 2.1 SSD | 2200/- |
| Canon IP1980 | 5000/- | HP 2410 | 7500/- | 5.1 Microlap | 5700/- |
| HP 1005 Laserjet | 13750/- | HP G3110 | 13900/- | 5.1 Creative | 6750/- |

Accessories: • Headphone - 400/- • Modem 56K - 600/- • Soundcard - 450/- • Card Reader - 400/- • Power Supply - 1250/- • UPS Battery 12V - 1250/-

UPS: DCP 650 W - 3900/- Techcom 650 W - 3900/-

* Warranty Value 1-3 years * Stock Available

MUSIC WORLD & COMPUTERS (PVT) LTD.

141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. தொலைபேசி/பக்ஸ்: 021 222 6554

Email: musicworld@dialognet.lk

**Diploma in OpenOffice**

- Text Document
- Presentation
- Database
- Templates
- Open Document
- Spreadsheet
- Drawing
- Formula

License Not Required — Free Software

உலகில் மிகபிந்திய தொழில்நுட்பம் OpenSource-OpenOffice

நாளைய உலகின் முன்னோடி நீங்களே!

பதிவுகள் 06.09.2009 க்குமுன்.மேலதிக விபரங்களுக்கு நேரில்,


324, பலாலி வீதி, யாழ்ப்பாணம் MCS Supported By

**மானிப்பாயில்**

**High Speed Internet Browsing**

எமது நிறுவனத்தில் காலை 8 மணிமுதல் மாலை 7 மணிவரை அதிவேக Internet Bowsing மேற்கொள்ளமுடியும்.

மேலதிக விபரங்களுக்கு :- UNI ICT Education Trainers (மானிப்பாய் பிரதேசசபை முன்பாக)




**2009 A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பம் 02,05,10.09.2009**

| | |
|---|---|
| Dip. In MS Office | 4 Months |
| Dip. In Desktop Publishing | 4 Months |
| Dip. In Computer Programming | 6 Months |
| Dip. In Eng. Drawing & Auto CAD | 3 Months |
| Dip. In Computerized Accounting | 4 Months |
| Dip. In Data Base Management System | 4 Months |
| Dip. In Audio & Video Editing | 4 Months |
| Dip. In Visual Basic | 4 Months |
| Dip. In Web Designing | 4 Months |

Free

Dip. In Hardware Engineering

Dip. In Internet e-mail

மேலதிக விபரங்களுக்கு

ONLINE CLASSESக்கும் மாணவர் அனுமதிக்கப்படுவர்

Softview Computer College

55, Arasady Rd, Jaffna. T.P: 021 2225170


## மரண அறிவித்தல்

### டேவிட் அலெக்சாண்டர் (லோயலாஸ் உரிமையாளர்)

யாழ்ப்பாணம், இராஜேந்திரா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட டேவிட் அலெக்சாண்டர் நேற்று (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.*

தகவல்: பிளான்ஸிஸ் லொயலா (மகன்).

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.08.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org